புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது

இந்துசாதனம்.

விரோதிஞு (1889) ஆவணிமீ உஅல ஆரம்பமானது.

THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரக் கிரயம்.

யாழ்ப்பாணப் பட்டினம்:	ஞூ 1-க்கு	ரூ. 5-60
வெளியூர், இந்தியா:	,,	ரூ. 9-40
தொலைவாய்ப்பகுதி:	,,	ரூ. 9-40
தனிப்பிரதி:		சதம் 6

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

முதன்முறைக்கு:—ஒருகலம்		ரூ. 9-40
,,	அரைக்கலம்	ரூ. 5-00
,,	கால்கலம்	ரூ. 3-15
,,	ஒரு அங்குலம்	சதம் 65

அடுத்த முறைகட்கு ஷெ விகிதங்களிற் பாதி. விளம்பரங்கள் முற்பண மனுப்பினுலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—கஎ. } யாழ்ப்பாணம்:—குரோதனஞு ஐப்பசிமீ கஉ; (1925 அக்டோபர் 29) வியாழக்கிழமை. { இலக்கம்—கக.

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்தவிநாயகன்ருள்வணங்கிவாழ்வாம்'

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக மூந்துயர் தீர்கவே.

இனும் காலண்டர் இனும்.

எங்களிடம் கட்டி வெள்ளியிலும் 1-ம் செ. 2-ம் செ. வெள்ளியிலும் மிச்சம் தப்புரவாக வேலைமுடித்த முரசுகுத்தி செங்காதரக்கொடி கைகோர்வை,முகப்புக்கொடி,காஞ்சி அரைஞாண்கொடி, கால்தண்டை, கொலுசு,வலைகளும் கடயம் சங்கணம், மயிர்மாட்டி, ஒட்டியாணமும், இமிடேசன் செகப்பு கம்மல் தோடு கடுக்கன் மோதிரங்கள் இன்னும் இதரவெள்ளி தங்க நகைகளும் பட்டுபருத்திமுதலிய ஜவுளித் தினுசுகளும் விலைகள் சகாயம். விலாசம் தெரிவித்தால் பிரைஸ்லீஸ்டு அனுப்புகிறோம். சுபம்.

தோ. வே. சென்னிசெட்டி &சன்ஸ்
சராப். ஜவுளி வியாபாரம்
குகை, சேலம்,
தென்-இந்தியா.

(H. 41.)

இனும்! காலண்டர் இனும்!!

எங்கள் கம்பெனியில் கட்டி வெள்ளிச் சாமான்களும், தெ. 1-ம், தெ. 2-ம் வெள்ளியாலும் மிச்சம் துப்புரவாக வேலை செய்த முரசு குத்தி செங்காதரக் கொடி, கைக் கோர்வை முகப்புக் கொடி, காஞ்சிக் கொடி, கால் தண்டை, செயின்கொலுசு, இன்னும் காலிற் போடும் சாமான்களும், மயிர்மாட்டி, கடயம், ஒட்டியாணம், மோதிரம், புதுச் சிகப்புக் கம்மல், தோடு, கடுக்கன், சிமை வயிரக்கம்பி சட்டங்கள், ஜவுளி பட்டும் பருத்தியும் கலந்த சேலை, சோமன், இன்னும் வேண்டிய சாமான்களும் இருக்கின்றன. தாங்கள் விலாசம் தெரிவித்தால் கிரயஜாபிதா அனுப்புகிறோம்.

நா. பிளே செட்டி அன கோ.,
சருப் ஜவுளி வியாபாரம்,
குகை, சேலம்,
தென் இந்தியா.

(H. 39)

வி. ஸாமி. அய்யங்காருடைய

அறைக்கீரைவிதைத் தைலம்.

பித்த மேகரோகாது சிரசுக்கேற அசனுற் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண்புகைச்சல், கண்ணிலிருந்து நீர்வடிதல், ஒருதலைவலி, இருதலைவலி, பீனிசம், காதினுல் சீழ்வடிதல், காது இரைச்சல், காதுவலி, ஐந்தவருஷத்திற் குட்பட்டதாயும் இரைச்சலோடுங் கூடிய காதடைப்பு, கரப்பன், தேமல், சிரசில் மயிர் உதிர்தல், சொண்டுகிழுதல் முதலான ரோகங்களை நிவர்த்திப்பதுமன்றி மயிரை நன்ருய் வளரச்செய்யும் இந்த நோட்டீஸில் காணப்படாத சமுத்திற்குமேற்பட்ட சகல வியாதிகளையும் அனுகூலப்படுத்தும், மேற்கண்ட வியாதியில்லாதவர்கள் தேய்த்து ஸ்நானம்பண்ணினுல் தேகத்திற்குக் குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையும் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீரில் சீயாக்காய்த்தேய்த்து ஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போஜனஞ் செய்துகொள்ளவேண்டும். 8 நாள்வரையிலும் சுசேதம் மாறுது அன்று பகலில்மாத்திரம் தூங்கக் கூடாது. 10 பலங்கொண்ட புட்டி 1-க்கு கிரயம் ரூபா 1—10—0. 'பார்ஸில்போஸ்டேஜ் சார்ஜு பிரத்தியேகம்'

'விற்பனைக்கு கமிஷன் ஏஜண்டுகள் தேவை விபரம் எழுதிக்கேட்கவு.'

ஜகேபகந்தம்மாள்,
8 கம். பிராமண் ரோட்
மைலாப்பூர், சென்னை.

(Q. 67.)

சுரத்தை நீக்கும் அற்புதமான மருந்து.

தளிர் (துலைப்பன்) காய்ச்சல் முதலிய சகல விதமான சுரங்களையும் டக்ரர் மைக்கோயின் "சுரசங்காரி" ஔஷதம் உடனே மாற்றிவிடும். டக்ரர் மைக்கோயின் சுரசங்காரி யென்னும் மருந்து எவ்வகைச்சுரத்தையும் மந்திரவசத்தால் மாற்றுவதுபோல உடனே மாற்றிவிடுகின்றது. மற்றும் வைத்தியர்களினுல் மாற்றமுடியாத நெடுநாட்பட்ட எவ்வகைச்சுரமும் இந்த மருந்தில் நாலு மூன்று போத்தலை உபயோகிப்பதனுல் முற்றாக மாறிவிடுகின்றது. ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். ஒருபோத்தல் கொண்ட மருந்தின்விலை ரூபா 1 சதம் 50. இம் மருந்து கொழும்பு கார்ஜில்ஸ் (Cargills Ltd.) கம்பனியிலும் மற்றும் மருந்துச்சாலைகளிலும் பெறற்பாலது. (Y. 47.)

சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிருர்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனுல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம்' சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது,

இதனுல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை றாத்தல் ஒன்றுக்கு ரூபா உ-0. அரைறாத்தலுக்கு ரூபா க0. கால் றாத்தலுக்கு ரூபா ரு தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினுங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினுல் முன் மணி ஆர்டர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்டு,
மட்டுக்களப்பு,
சிலோன்.

(M. 36.)

ESTABLISHED, 1909.

MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
Kairul Muslimeen Medical Hall
PORTONOVO (*South Arcot Dt; India.*)

இந்த விளம்பரம்முழுதும் தாங்களும் வாசித்து தங்கள் சிநேகிதர்களுக்கும் வாசிக்கக்காண்பியுங்கள். குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்வது போல் வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

கண்பிற்குகந்த அன்பர்காள்! நமது கம்பெனி ஸ்தாபித்த 1909-வது வருடமுதல் நாளது தேதிவரையில் கீழ் காணப்பட்ட லேகியத்தைச் செய்து இந்தியா, பர்மா, சிலோன், மலாய் முதலிய தேசவாசர்களுக் கனுப்பி ஒவ்வொரு மஹான்களாலும் பிரபுக்களாலும் பிரயோகித்து நோயற்ற வாழ்வென்னும் பாக்கியத்தை குறைவற்ற செல்வமாயடைந்து ஒவ்வொரு கனவான்களாலும் நமக்கு யோக்கிய நற்சாக்ஷிகளும் அனந்த பரிசுகளும் பெற்றுவருவது நேயர்கள் அறிந்த விஷயமேயாம். தற்கால நிலைமைக்கேற்றாப்போல் அனந்த பொய்வசனங்களை விடுத்து புதிது புதிதாக இத்தகைப்போன்ற குருவிலேகிய மென ஓர் நாமஞ் சூட்டி பத்திரிகை நோட்டீஸ் மூலமாய் வெளியிட்டிருக்கும் போலி மருந்துகளை நம்பிக் கையாண்டு பொருள் நஷ்டமும், மனக்கஷ்டமுங் கொள்ளாது நீடியகாலத்து அனுபவ முத்திபெற்ற உண்மையான மருந்துகளை நமதுடைய யோகவான்கள் உணர்ந்து தருவித்து அருந்துவீர்களாக.

இதுவே அசல் பாகமுள்ளது! ஒருவருமிகழ்ந்து பேசாதது!!

உத்திரவாதமுள்ள

சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

ஷை இச்சிறந்த இராஜ ஔஷத லேகியமானது முற்காலத்து மன்னர்களால் உபயோகித்துப் பிரசன்னமாய்ப் புகழ்ப் பெற்று வீரியசக்திக் குறைபாடு இல்லறத்தின் இன்ப வாழ்க்கையை யடைந்து புத்திர பௌத்திர சம்பன்னராய் நீடூழிவாழும் பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய எட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், சோர்வில்லாத தைரியத்தை உண்டாக்கக் கூடியதுமான ஒப்பற்ற ஓர் புருஷ சஞ்சீவியாகின்றது. இச்சிறந்த அபூர்வ குண லேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக்குடன் அறியவேண்டியதென்றே ஜனனுகூல நன்மைக்காகவே இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றேம். மற்ற விவரங்களை நமது கேட்லாக்கில் காணலாம்.

ஷை லேகியத்தின் முக்கிய குணமாவது.

வாதபித்த சிலேத்ம மிகுதிக் குறைவால் ஏற்படும் இரத்தக் குறைவு எழுவகை தாதுக்களின் பலஹீனம் நஷ்டி, வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீர்சுருக்கு, நீர்எரிச்சல், நீர் பெருத்தல் ஆகிய நோய்களையும் சித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாது நஷ்டம், துர்ஸ்வப்னம், Spermatorrhea, தேகமெலிவு, சதா இடுப்புவலி, ஸ்காலிதம், [illegible], பித்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஒடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி Nervous-diseases ஆகிய நோய்களைச் சுகப்படுத்தி இரத்தத்தைச் சுத்தி செய்து புதிய மேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிட சிறந்த மருந்து கிடைப்பது அரிதினும் அரிது.

40 நாள் சாப்பிடும் பெரிய டப்பி 1-க்கு விலை ரூ. 8—0—0
20 நாள் சாப்பிடும் சிறிய டப்பி 1-க்கு விலை ரூ. 4—0—0

வி. பி. தபால் சார்ஜ் பிரத்தியேகம் முற்பணமனுப்பினுல் வி-பி. செலவு இனமாயனுப்பப்படும். பினங்கு, சிங்கப்பூர், மலாக்கா, கோலாலம்பூர், கிள்ளான் முதலிய Straits Settlements வாசர்களும் Federated Malay States வாசர்களும், மருந்தின் கிரயமும் தபால் செலவு ரூ. 2-ம் சேர்த்து முற்பண மனுப்பி மருந்து பெறவேண்டும். ஷை ஊர்களுக்கு நிண்ணமாய் வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது ஷை குருவியன சத்தால் செய்யப்படவில்லை யென்ருவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லை யென்ருவது அல்லது சில போலியர்கள் ஆயிரக்கணக்கான ரூபாய்களை சபதங்கள் கூறிக்கொண்டு பத்திரிகை வாயிலாய் வெளிவந்த இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குண முண்டென்ருவது அல்லது இந்த அபூர்வ குண லேகியத்தைச் செய்து காட்டினுலாவது, கடவுளர்த் பொதுவாய் சத்தியமாய் ரூபிப்பவர்களுக்கு அவர்களால் கூறிய சபதங்களின் தொகையும், நமது கம்பெனியால் ரூ 1000 இனமாயும் சேர்த்துக் கொடுக்கப்படும். அப்படியே ரூபித்தும் இனமுடைய பணத்தைக்கொடுக்கத்தவறினுல் கோர்ட்டு மூலமாகவசூல் செய்துக்கொள்ளலாம். ஆர்டர்செய்யும் நேயர்கள் இப்பத்திரிகையின் பெயரைக் குறிப்பிட்டெழுதவும்.

என் மேல்விலாசம்:—

Tel. Address:—
Kader Brothers
PORTO-NOVO

மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ் எம் ஏ. காதர் பிறதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை,
தென்னுற்காடு ஜில்லா.

(Y. 38.)

மிருகத்தின் கொழுப்பு மலிவுதான்;

ஆனுல் அது சேர்த்தால் நல்ல தைலமுண்டாகாது. மிருகக் கொழுப்பினுல் தைலம் செய்வது சுலபமே. விலையும் சரசமாகும்.—ஆனுல் அது பொதுஜனங்கள்மனதிற்கு ஒப்பாது.

லிட்டில்ஸ் ஓரியன்டல் பாம்

செய்வதில் இந்தத் துர்நாற்றமுடைய மிருகக் கொழுப்பு விலக்கப்படுகிறது. ஆகையினுலே அது மிகவும் உயர்ந்த மருந்தாகிறது. மனதிற்கு ஒத்துமிருக்கிறது.

5—L—35.



(Y. 41. c.)

இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— குரோதன௵
ஐப்பசி௴ கஉ௳ வியாழக்கிழமை

இலங்கை வித்தியாபரிபாலன அறிக்கைப்பத்திரம் ;1925

வித்தியாகத்தர் இலங்கை முழுவதிலும் ஊட்டப்படும் கல்விவிஷயமாகச் சென்ற 1924-ம் ஆண்டிற்கென எழுதிய அறிக்கைப் பத்திரம் வெளிவந்துவிட்டது. குறித்த வருடத்திலே 11000 பிள்ளைகள் முந்திய வருடங்களைக்காட்டிலும் மேலதிகமாகப் பள்ளிக்கூடத்திற்குச் செல்லுகின்றார்கள். அரசினரால் புதியனவாக ஸ்தாபிக்கப்பட்ட வித்தியாசாலைகளின் தொகை 39. ஆனால் உதவி நன்கொடைப்பணம்பெற்ற 8 வித்தியாசாலைகள் இல்லாது தவிர்க்கப்பட்டன. சென்றவருடத்தில் 5000 சிறுமியர் வரையில் மேலதிகமாக வித்தியாசாலைகளிற் சென்று கல்விகற்று வரலாயினர். கல்விகற்கும் சிறுமியர்களின் தொகையில் நூற்றுக்கு 23 விகிதமானோர் ஆங்கிலவித்தியாசாலைகளிற் கல்வி பயிலுகின்றனர்.

மேன்மாகாணம் வடமாகாணம் என்னும் இருமாகாணங்களுமே வித்தியா விருத்தியில் ஏனைய மாகாணங்களைக் காட்டிலும் சிறந்தனவாகக் காணப்படுகின்றன இம்மாகாணங்களிலே 8 பேருக்கு ஒருவர் விகிதம் கல்விகற்கின்றார்கள். சென்றவருடத்திலே கல்விவிஷயமாக அரசினர் செலவிட்ட பணம் 4,00000 ரூபா. ஆங்கிலம் பயிலும் மாணாக்கர் ஒவ்வொருவருக்கும் 25 ரூபாவும் தமிழ்பயிலும் ஒவ்வொருவருக்கும் 8 ரூபாவும் சராசரியாக உதவி நன்கொடைப்பணமென உதவப்படுகின்றன.

ஆங்கில வித்தியாசாலை விஷயமாகச் சொல்லுகில் உயர்தர ஆங்கில வித்தியாசாலைகள் (Secondary Schools) நாற்பதும் இடைத்தர வித்தியாசாலைகள் (Higher Grade Schools) பதினைந்தும் கீழ்தரவித்தியாசாலைகள் நூற்றம்பத்தோன்பதும் ஏனைய ஆங்கிலவித்தியாசாலைகள் பதினைந்தும் குறித்தவருடத்தில் உள்ளன.

அரசினர் உதவிநன்கொடைப்பணம் பெறும் வித்தியாசாலைகள் இக்காலத்திற் கேற்ற வேண்டிய உபகரணங்களோடும் தளபாடங்களோடுமிருப்ப அரசினர் ஸ்தாபித்து நடத்தும் வித்தியாசாலைகள் அங்ஙனமிருக்கவில்லையென இப்பொழுது வெளிவந்துள்ள அறிக்கைப்பத்திரம் வாயிலாக அறியக்கிடக்கின்றது. மேலும் அரசினர் வித்தியாசாலைகளிலே கல்விபயிற்றும் ஆசிரியர்களைக் காட்டிலும் உதவிநன்கொடைப்பணம் பெறும் வித்தியாசாலைகளிற் கல்விபயிற்றும் ஆசிரியர்கள் திறமைவாய்ந்தவர்களெனவும்தொகையிற் கூடியவர்களெனவும் அறியக்கிடக்கின்றது. இந்நிலைமை "சோறிபேவன் நம்ம ஆளாகவிருந்தால் தலைப்பந்தியிலிருந்தாலென்ன கடைப்பந்தியிலிருந்தாலென்ன" என்னும் பழமொழியை ஞாபகப் படுத்துகின்றது.

வடமாகாணத்திலுள்ள வித்தியாசாலைகளில் தேகாப்பியாசம் பெரிதும் அலட்சியஞ் செய்யப்படுகின்றதெனவும் இங்குள்ள வித்தியாசாலைகள் எல்லாவற்றிலும் சிரங்கினாற் பீடிக்கப்பட்ட பிள்ளைகள் இடையிடையே காணப் படுகின்றனரென்றும் தலைமை வித்தியாதரிசியாகிய மிஸ்ரர் H. S. பெறிரு கூறுகின்றார். அவர்சொல்வது அத்தனையும் உண்மையாகும்.

இங்குள்ள பிள்ளைகள் ஆங்கிலப்புத்தகத்தைக் கையிலெடுத்தவுடனே தாங்கள் தேகத்திற்குச் சிரமத்தைத்தரக்கூடிய எவ்வகையான தொழில்களையும் செய்வதற்குப் பெரிதும் அலுப்புப்படுகின்றனர். தெருவழியே கூட்டாளிமாருடன் திரிய விரும்புகின்றார்களன்றி விளையாட்டு முன்றிலுக்குச் செல்லப் பின்னிற்கின்றனர். தங்கள்பெற்றோருக்குக் கமத்தொழில் விஷயமாகவும் வீட்டிற் செய்யப்படும் விஷயமாகவும் உதவிசெய்தல் கௌரவக்குறைவெனப் பிழையாகப் புத்தி பண்ணிக் கொள்ளுகின்றனர். இங்குள்ள ஆசிரியர்களும் விளையாட்டு விஷயமாக யாதும் முயற்சிசெய்வதில்லையெனச் சொல்லுதல் மிகையாகாது. இனி, நாட்டுப்புறத்திலுள்ள கிராமங்களிலிருந்து எத்தனையோ பிள்ளைகள் தினந்தோறும் நான்கு ஐந்து மைல் வருதற்கும் பின்னர் அப்படியே போதற்கும் நடந்தே செல்லவேண்டியவர்களா யிருக்கின்றார்கள். முழுப்பகலும் பள்ளிக்கூடநேரத்தையொழித்த நேரமாகிய காலையும் பின்னேரமும் இவர்கள் வீட்டிலிருந்து பள்ளிக்கூடத்திற்கு வருதற்கும் பின்னர் மீண்டுபோவதற்குமே போதியதாகும்.

இங்குள்ள பிள்ளைகளுள் அநேகர் சொறிசிரங்கினாற் பீடிக்கப்பட்டிருத்தலை யாம் இப்பொழுது காண்கின்றோம். இவர்களுள்ளும் பள்ளிக்கூடமாணவர்களே பெரும்பான்மையும் இந்நோயோடு காணப்படுகின்றனர். இவர்கள் இக்நோயாற் பீடிக்கப்பட்டு வருதற்குக்காரணம் அநாசாரமென்றே சொல்லலாகும் சைவசமயத்தவர்களே ஆசாரமாக விருப்பதிற் சிறந்தவர்களென்பதை ஏனைய மார்க்கத்தவரும் ஒத்துக்கொள்வர் சைவர்கள் ஸ்நானஞ்செய்தபின்பே போசனஞ்செய்தல், ஸ்நானஞ்செய்தபின் தோய்த்துலர்ந்த வஸ்திரந்தரித்தல், ஒருவருடைய உச்சிட்ட பாத்திரத்தை இன்னொருவர் எடுத்து உபயோகியாமை எப்பொழுதும் ஸ்நானஞ்செய்தல் முதலான ஆசாரங்களை அநுசரித்து வருகின்றார்கள் ஆனால் இக்காலத்துப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் தங்கள் சமயத்திற்கும் சாதிக்கும் உரிய இந்த ஆசாரங்களைக் கைவிட்டு எப்பொழுதும் ஸ்நானஞ் செய்யாதவர்களாயும், அழுக்கடைந்த சட்டைகளை வாரக்கணக்கிலும் மாசக்கணக்கிலும் அணிந்து கொள்பவர்களாயும் உச்சிட்டத்திற் பேதம் பாராட்டாதவர்களாகவும் சிங்களர் பறங்கியரைப் பின்பற்றி நடக்கத்தொடங்கியிருக்கின்றார்கள். மற்சமாமிச உணவும் சிரங்கை விருத்தி செய்வதற்குப் பெரும் ஏதுவாகும் இக்காலத்திலே கல்விகற்றற்காகிய பணச்செலவு அதிகப்பட அதிகப்பட தங்கள் பிள்ளைகளை எவ்வாற்றாலும் ஆங்கிலம் படிக்கச் செய்யவேண்டுமென்ற எண்ணங்கொண்ட ஏழைப்பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளின் உணவைப்பற்றிச் சிந்திக்கின்றிலர். எத்தனையோ ஏழைப்பிள்ளைகள் காலையில் மாத்திரம் ஏதும் உண்டுவிட்டுப் பள்ளிக்கூடத்திற்கு வந்து மத்தியானப் போசனமின்றி வெறுவயிற்றோடு ஆறு ஏழு மணிநேரத்திற்கு இருந்து படித்துவிட்டு அதன்பின் மூன்று நாலுமைல் தூரம் நடந்து சென்று தங்கள் வீட்டையடைந்து மாலை 6 மணிவரையில் ஏதும் உண்ணக்காண்கின்றோம். இவ்வாறான தாரித்திரிய நிலைமையிலிருக்கும் யாழ்ப்பாணத்து ஏழைப்பிள்ளைகள் சொறிசிரங்கின்றியிருப்பார்களென்றும் கிரமமாகத் தேகாப்பியாசஞ் செய்வார்களென்றும் மிஸ்ரர் பெறிரு எப்படிக்காத்திருத்தல் கூடும்.

சுதேசபாஷைக் கல்வியைப்பற்றிச் சொல்லுமிடத்து, சென்ற 1924-ம் ஆண்டிலே 12000 பிள்ளைகள் சுதேசபாஷைக் கலாசாலைகளில் மேலதிகமாகச்சேர்ந்து படித்துவருகின்றார்களென்றும், சுதேச பாஷைகளைப் படிக்கவேண்டுமென்னும் விருப்பம் இப்பொழுது இலங்கைவாசிகளிடத்திற் காணப்படுகின்றதென்றும் வித்தியாபகுதியார் [illegible]விக்கின்றனர்

சிவநாம மகிமை

[துறைமங்கலம்
சிவப்பிரகாசசுவாமிகள்
அருளிச்செய்தது]

கலிவிருத்தம்.

வேத மாகமம் வேறும் பலப்பல
ஓதி நாளு முளந்தடு மாறன்மின்
சோதி காணிருள் போலத் தொலைந்திடுந்
தீதெ லாமுஞ் சிவசிவ வென்மினே.

இதன் பொருள்:—வேதம் - வேதங்களையும்; ஆகமம் - ஆகமங்களையும்; வேறும் பலப்பல - (பரந்துகிடக்கும்) ஏனைய பல சாஸ்திரங்களையும்; நாளும் ஓதி - நாள்தோறும் பாராயணஞ்செய்து; உளம் தடுமாறன்மின் - மனந்தடுமாறுதீர்கள்; சிவ சிவ என்மின் - "சிவ சிவ" என்று சொல்லுங்கள்; உம் தீது எலாம் - (இங்ஙனஞ் சொல்லுவீர்களாயின்) உங்களுடைய தீவினைகளெல்லாம்; சோதி காண் இருள் போல - ஒளியைக்கண்ட இருளைப்போல; தொலைந்திடும் - நீங்கிவிடும் என்றவாறு.

நான்கு வேதங்களையும் இருபத்தெட்டு ஆகமங்களையும் பரந்துகிடக்கும் ஏனைய பல சாஸ்திரங்களையும் நாள்தோறும்பாராயணஞ்செய்து இடர்ப்படவேண்டா; 'சிவ சிவ'' என்றுமாத்திரம் நாள்தோறும் பன்முறை உச்சரித்துவிடுங்கள்; அங்ஙனஞ்செய்யின் நீங்கள் செய்துள்ள தீவினைகளெல்லாம் சூரியனைக் கண்ட அந்தகாரம்போல் அகன்றுவிடும் என்பதாம்.

வேதங்களும் ஆகமங்களும் பல சாஸ்திரங்களும் நாள்தோறும் ஓதுமுயற்சியாது பார்த்திடக்கின்றமையின் இவற்றுள் எவற்றை ஓதுவது எவற்றை ஓதாதொழிவது என்று மனத்தின்கண்ணே வீணே தடுமாற்றமுறுதிர்களென்பார் "உளந் தடுமாறன்மின்" என்றார், இங்ஙனம் தடுமாறுதலையொழித்து உபாயமாகச் 'சிவசிவ' என்று மாத்திரம் உச்சரிப்பீர்களாயின் சகல தீவினைகளுந் தப்பாது கடிதில் அகன்றுவிடும் என்பார் 'சோதிகாணிருள் போலத் தொலைந்திடும்—தீதெலாமுஞ் சிவசிவ வென்மினே'' என்றுங் கூறினார். "சிவசிவ வென்றிடத் தீவினை மாளும்" என்றார் திருமூலநாயனாரும். மின், பன்மை ஏவல் வினை முற்றுவிகுதி. ஏ, அசை.

மனிதர்கள் இறந்தபின்னருஞ் சஞ்சாரஞ் செய்தல்.

அற்புதமான சம்பவங்கள்.

சேர் ஆர்தர் கொனன் டொயில் (Sir Arthur Conan Doyle) என்னும் தத்துவ சாஸ்திரியார் மனிதர்கள் இறந்தபின்னர் இந்த உலகத்திலே சஞ்சரிக்கும் இயல்புடையரெனத் தக்க ஆதாரங்களோடும் பிரத்தியட்சமாகக் கண்ட சாட்சிகளோடும் தெரிவிக்கின்றார் அதனைச் சுருக்கி மொழிபெயர்த்து இங்கே தருகின்றோம்.

இறந்தமனுஷர்களின் சஞ்சாரவிஷயமாக ஆரம்பத்தில் நான் மிகவுஞ்சந்தேகமுடையவனாகவிருந்தேன். இந்தவிஷயமாக நெடுங்காலம் நான் பல ஆராய்ச்சிகள்செய்தும் என் அநுபவத்தில் யாதும் கண்டுகொள்ள என்னால் முடியவில்லை. ஆனால் இவ்விஷயமாக, தக்க ஆராய்ச்சி செய்துள்ள நீதிபதியாகிய எட்மண்டு, குறூக்ஸ், றசல் உவாலஸ், மையர்ஸ் முதலியோர் தாங்கள் நேரிற் கண்டுள்ள அநுபவங்களாயுள்ளவற்றை யான் படித்தபோது எனக்கும் பெரும் நம்பிக்கை யுண்டாயது. நான் பின்னரும் இவ்விஷயமாக மிக்க ஊக்கத்தோடு முயற்சி செய்துவந்தேன். இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன்னர் ஆசிரியர் குறூக்ஸ் 3 வருடகாலமாகத் தம்முடையசாஸ்திரசாலையிலே பல அரிய பிரயத்தனங்களையும் ஆராய்ச்சிகளையும் செய்துமுடித்து ஈற்றில், இறந்தவர்கள் சஞ்சாரஞ்செய்கிற காலத்தில் தக்க சாட்சிகளுடன் 40 பிரதிமைப்படங்கள் எடுத்திருக்கின்றார்.

தத்துவ சாஸ்திரிகளாகிய றிச்செற், கெல்லி, ஷிறுமன்ற் என்னும்மூவரும் பரிஸ் பட்டினத்திலேயுள்ள தத்துவசாஸ்திர ஆராய்ச்சிச்சாலையில் ஆராய்ந்து இறந்தவர்களுடைய ஆவேசங்களைக் கண்டிருக்கிறார்கள். இந்த ஆவேசங்கள் பரிசிக்கத்தக்கனவாகவும் நடத்தல், பேசுதல், கேட்டகேள்விகளுக்கு மறுமொழி சொல்லுதல் முதலிய செய்கைகளை யுடையனவாகவுங் காணப்பட்டன. இவைகளுடைய கை அடையாளம் அடிச்சுவடு என்னும் இவைகள் எடுக்கப்பட்டன. இப்படி எடுக்கப்பட்ட பிரதிமைப் படங்களின் பிரதிகள் இப்பொழுதும் லண்டன் நகரத்திலே காணத்தக்கன. இவைகளை எவரும் நன்றாய்ப் பரிசோதித்துப் பார்க்கலாம்.

இனி, நான் என்னுடைய அநுபவத்திற் சிலவற்றைச் சொல்லுகிறேன்; நான் கண்டவைகள் முழுவதையும் இங்கேகூறப்புகின் அது ஒரு பெரிய புத்தகமாக விரியும். ஆனதுபற்றிச் சிலவற்றைமாத்திரம் உதாரணமாகச் சொல்லி முடிக்கின்றேன்.

இற்றைக்கு 5 வருடங்கட்கு முந்தி "சௌதசீ" (South sea) என்னுமிடத்தில் நான் இருக்கும்போது இறந்த என்னுடைய மகன் ஆவேசமாக மீண்டுவந்தான். அவன் என்னுடைய தலையில் தன்கையை நன்கு பொருந்தவும் என்னுடைய நெற்றியில் தன் உதடுகள் பொருந்தவும் என்னைத் தீண்டி என்னோடு சில விஷயங்கள் பேசினான். உயிரோடு அவன் இருந்த காலத்திலே சம்பந்தப்பட்டிருந்த சில அந்தரங்க விஷயத்தை என்னோடு அந்தச் சமயத்தில் ஆவேசமாகவுள்ள என்மகன் வழக்கமான குரலுடன் பேசியபோது அந்த அறையிலுள்ளோரெல்லாரும் அச் சம்பாஷணையைத் தெளிவாகக் கேட்டார்கள். அவர்களெல்லாரையும் நான்சாட்சியமாக வைத்துக்கொண்டேன். சாட்சிகளாகவுள்ளவர்கள் யாரென்னில் என் மனைவி, சௌத்சீ என்னுமிடத்துள்ள மிஸ்ரர் மைக்வார் லேன், அவருடைய மனைவி, போர்ணிமௌத் என்னுமிடத்திலுள்ள மிஸ்ரர் பிளேக், லண்டன் நகரிலுள்ள மிஸ்ரர் எங்கொல்ம் ஆகிய இவர்களாம்,

மிதிர் என்னுமிடத்தில் எனது சகோதரராகிய சேனாபதி டொயில் (General Doyle) என்பவருடைய ஆவேசத்தைச் சந்திக்கலானேன்; அவர் விதவையாகவிருக்கும் தமது மனையாளின் க்ஷேமத்தை என்னிடம் விசாரித்த பின் "கொப்பனேஜின்" என்னுமிடத்திலிருக்கும் ஒருவருடன் ஒரு விஷயத்தைவிட்டு யோசித்துச் செய்யும்படி தன் மனையாளுக்குச் சொல்லுதல் வேண்டுமென எனக்குத் தெரிவித்தார். அவர் சொல்லிய ஆளின் நாமம் நான் முன் ஒருபோதும் அறியாததாகவிருந்தது. ஆனால் குறித்த இடத்திலே நான் விசாரணை செய்தபோது நமது தமையனார் சொன்ன பெயருடையவர் அங்கேயிருப்பதாக அறிந்தேன். நானும் எனது தமையனாருடைய ஆவேசமும் பேசியபோது என்பக்கத்தே அச்சமயத்தில் உடனிருந்த பத்திரிகாசிரியர் பெயிலிஸ் "சநே"யும் வேறு சிலரும் எங்களிருவருக்குமிடையே நடந்த சம்பாஷணையை நன்கு கேட்டுள்ளனர்.

"மிஸ் பெசினற்" என்னும் பெண்ணும் நானும் என் வீட்டிலிருக்கும்பொழுது இறந்த என் தாயாருடைய முகத்தை நான் ஆவேசமாகக்கண்டேன். என் தாயின் கட்புருவத்திலுள்ள திரைகளை நான் மிக நுட்பமாகப் பார்த்தேன். என் பக்கத்திலிருந்த பெண்களும் இதனை நுட்பமாகக் கண்டனர். இன்னொரு சந்தர்ப்பத்தில் நான் இறந்துபோன எனது மருமகனுடைய முகத்தைப் பார்த்தேன். அவனுக்கு நான் என்றுஞ் செய்ய முடியாத ஒரு கருமத்தைப்பற்றிப் பேசியபோது அவன் அழுதான். இந்த முறைதான் ஆவேசம் தனக்கு இஷ்டமில்லாததைச் சொல்லும்போது முதன் முதல் அழுதமையை நான் என் அநுபவத்திற் கண்டேன்.

அமெரிக்காவில் நானிருந்த போது எனது மனேஜராகிய மிஸ்ரர் லீ- கிடிக் என்பவருக்கு ஆவேசங்களைக் காட்டினேன். அவர் இந்த விஷயத்திலே நம்பிக்கையில்லாத ஒரு தலைசிறந்த மனுஷன். அவர் ஒரு ஆவேசத்தைக் கண்டவுடனே "சாய்க்கிட்டன்" என்றுபெலத்துக் கத்தினர் ஆவேசமாகத் தோற்றிய சாய்க்கிட்டனும் எனது மனேஜரும் பிரியா நண்பர்களாக இருந்தவர்கள்.

கிளாஸ்க்கோ நகரத்தில் நான் கண்ட அற்புதத்தைச் சொல்லுகின்றேன். என்னோடு அந்நகரில் வசிக்கும் இன்னும் 14 பேர் அங்குச் சமுகமாயிருந்தார்கள். அவர்களில் ஒருவர் "கிளாஸ்க்கோ—றெக்கேட்" என்னும் பத்திரிகையின் ஆசிரியர். நாங்கள் எல்லாரும் பயபக்தியோடு நின்று கடவுளை நோக்கிச் செபம் பண்ணினோம். உடனே ஒரு பெருங் காற்று அடித்தது; நெருப்புச் சுவாலைகள் காணப்பட்டன; அசரீரி வாக்காக ஒரு சத்தம் எங்களுக்குச் சிறு பிரசங்கஞ் செய்யக் கேட்டோம். என் விஷயமாக அந்தச் சத்தம் அன்றிரவு நடக்கப்போகும் விஷயத்தை முந்தியே சொன்னது. அன்றிரவு நான் 6000 சனங்கள் கூடியுள்ள ஒரு மகாசபையிற் பிரசங்கஞ் செய்தேன்; பகல் நடந்த இந்த செய்தியையும் அங்குள்ளவர்களுக்குச் சொன்னேன். என்னுடனிருந்த 14 பேரும் நான் சொன்னவைகட்கு அச்சபையிலே சாட்சியமாகவிருந்தனர்."

தலையாய பெருங் கடன்.

சைவசமயிகளெல்லோரும் தமது ஏழாவது பிராயத்தில் சமயதீக்ஷை பெறல் வேண்டும். அதனைப் பெற்றுக்கொள்ளாதோர் சைவசமயிகளாகமாட்டார்களெனச் சமயநூல்கள் கூறும். எனவே ஒவ்வொருவரும் இதனைத் தப்பாது பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். நாம் செய்யவேண்டிய இன்றியமையாக் கடமைகள் எவைக்கும் இது இரண்டாவதான ஒன்றன்று. இக்காலத்தில் இச்சமயதீக்ஷை அநேகரால் அலட்சியஞ் செய்யப்படுகின்றது நமது கடன்கள் எல்லாவற்றிலும் பார்க்க இதனை முதலாவதாக வைத்தமைக்கு விசேடகாரணங்களுள. முறைப்படி சமயதீக்ஷை பெற்றுப் பஞ்சாக்ஷரசெபஞ் செய்வோர் அதன்வாயிலாக மோக்ஷசாம்பிராச்சியம் குருலிங்கசங்கமசேவை இட்டசித்தி முதலானவற்றைப் பெறுவரென்பதாம். இம்மகாமந்திரம் என்றும் அதிவிசேடமுடையது அக்கிரமம் மிகுந்த இக்கலியில் பூர்வபுண்ணிய முடையோர் ஒருசிலரும் தீவினையுடையோர் பலருமாவர். தீவினையாளர் பலராதலின் அவரது தீயவினைகள் சமயதீக்ஷை பஞ்சாக்ஷரசெபம் என்னும் இவற்றில் அவர்களை உறுதிப்பட்டுநிற்க விடுவதில்லை. சிலர் சமய தீக்ஷை பெற்றும் தினந்தோறும் அதனை முறைப்படி நடத்துவதில்லை. சிலர் உற்சவம் விரதம் முதலான விசேடகாலங்களில் மாத்திரம் ஒருவாறு நிறைவேற்றுவர். சிலர் ஓரேமுறையில் முடித்துவிடுவர். சிலர் தினந்தோறுமேனும் ஒன்றைவிட்டொருநாளேனும் இரண்மூன்றுநாளைக்கு ஒருமுறையேனும் ஸ்நானஞ் செய்யவேண்டி நேருங் காலங்களில் மாத்திரம் ஏனைக் கிரியைகளினின்றுங் குறியிடுவர். சில இடங்களில் நாயகன் சமயதீக்ஷை பெற்றும், நாயகி அது இல்லாமலும், சில இடங்களில் மனைவி சமயதீக்ஷைபெற்றும், கணவன் அதற்கு நேர் விரோதமாகவுமிருக்கின்றனர் சிலர் சமயதீக்ஷைபெற்று அது ஆவசியகமில்லாததென விபரீதபுத்தி கொண்டு ஒழித்துவிட்டனர். சிலர் பல கருமங்களை ஏககாலத்திற் பார்க்கும் அவதானமுடையார் போன்று லௌகிகார்த்தமான பல கருமங்களைப் பலருடன் பேசிக்கொண்டு அநந்த ஸ்தானங்கள் சிறிதும் மாறுமற் குறிகளைப் பொறித்துவிடுவர். சிலர் ஸ்நானம் ஆசாரம் மந்திரம் பாவனை கிரியை சிரத

(ஐந்தாம்பக்கம் பார்க்க.)

மதுக்கடைகளைப்பற்றிய புதிய பயனற்ற பிரமாணம்

1926-ம் வருடம் அக்டோபர்மீ 1-ந்வ தொடக்கம் குடிவகைக் கடைகளிலே பெண்களாயுள்ளார்க்கு மதுபானம் விற்கவொண்ணாதென ஒரு பிரமாணத்தை விதிப்பதற்கு அரசினர் தீர்மானித்திருக்கின்றனர். அப்பிரமாணம் பின்வருமாறு:- (1) பதினாறு வயதுக்குட்பட்ட எவர்களுக்கும் (2) மூளைக்கலக்கமுள்ள எவர்களுக்கும் (3) வெறிகொண்டு சச்சரவு விளைப்போர் எனக் கருதப்படுவோர்க்கும் (4) தவறணை எல்லைக்குள் குடிக்கும் பொருட்டுப்பெண்களுக்கும் விற்கவொண்ணாது, அல்லது கொடுக்கவொண்ணாதென்பதாம். எனவே உத்தரவு பெற்று மதுபானத்தை விற்கும் விடுதிகளுக்குப் பெண்களும் மற்றெவரும் சென்று மதுபானத்தை வாங்கலாம் குடிக்கலாம் என்பது, எவர்களும் மதுபானம் விற்கப்படும் கடைகளுட் பிரவேசிக்கலாமென்பதும் அங்கிருந்து கள்ளை அல்லது சாராயத்தை அல்லது அந்நிய நாட்டுக் குடிவகையை எக்காரணம் பற்றியும் வாங்கிக்கொண்டு செல்லலாமென்பதும் வெளியாகின்றன.

கவனக்குறைவினால் நேர்ந்த அதிக நஷ்டம்.

“ஒஸ்ரலி” என்னும் புகைக்கப்பல் மார்க்கமாகவந்த பிரயாணி ஒருவர் சென்ற ஞாயிற்றுக்கிழமை மோட்டாரதமொன்றில் கண்டிக்குச்சென்று மீண்டு, வண்டிக் கூலியாகிய பத்துத்தங்கப்பவுணைக் கொடுப்பதற்குப் பதிலாக இரண்டு ஐம்பதுதங்கப்பவுண் பெறுமதியான நோட்டுகளை எடுத்து அவை ஐந்து தங்கப்பவுண் நோட்டுக்களென நினைத்துக் கொண்டு சாரதியிடம் கொடுத்தனர். சிறிதுவேளையின் பின் விஷயத்தை உணர்ந்த பிரயாணி பொலிசரிடம் சென்று முறையிட்டுத் தனக்குப்பார்வை குறைவெனக் கூறினர். பொலிசர் அதிகசிரமப்பட்டு ஷை வண்டிச் சாரதியைக் கண்டுவிசாரித்தனர். சாரதி அந்தநோட்டுக்களைத் தான் கவனித்துப் பாக்கவில்லையென்றும் அவைகள் ஐந்து பவுண்நோட்டுக்களெனக் கருதிக் கொழும்பிலுள்ள வீதி ஒன்றில் ஒருவரிடம் இலங்கை நாணக மாகமாற்றித் தரும்படி கொடுத்ததாகவும் கூறினன். பொலிசர் விடுதிக்குச்சென்று குறித்தநோட்டுக்களை மாற்றியவரிடம் கேட்டபோது அவர் தான் அந்தநோட்டுக்களைப் பணமாற்றும் ஒருவரிடம் கொடுத்து இரண்டு ஐந்து தங்கப்வுண்பெறுமதியான பணத்தை இலங்கை நாணகமாகப்பெற்று ஷை இரதச்சாரதியிடம் கொடுத்ததாகக் கூறினர் பொலிசர் பணத்தைமாற்றியவரிடம் சென்று விசாரித்தபோது அவர் அத்தினத்திலே ஐம்பது தங்கப்பவுண் பெறுமதியான நோட்டு ஒன்று தானும் தன்னிடம்வரவில்லையென்று கூறினர். பொலிசர் இந்த நோட்டுக்களைத் தேடித்திரியும்போது சென்றதிங்கட்கிழமை ஐம்பது தங்கப்பவுண் பெறுமதியான மூன்று நோட்டுக்கள் அவர்களுடைய கையிற் சிக்கின. குறித்த பிரயாணி தனதுநோட்டுக்களின் இலக்கத்தைக்கூறமுடியாதிருந்ததினால் அந்நோட்டுகள் பிரயாணிக்குரியனவென அத்தாட்சிப்படுத்தக் கூடவில்லை.

வாழைக்குலை திருடிய கள்வன்.

சில நாட்களுக்குமுன் ஒரு இரவு குருநாக்கலைச் சேர்ந்த கொலூர் என்னும கிராமத்திலே ஜோனுத் என்னுமொருவனும் ரிமொதியா என்னுமொருவனும் அங்குள்ள ஒரு வாழைத்தோட்டத்துட் புகுந்து இரு வாழைக்குலைகளைத் திருடினார்கள். கரோலிஸ் எனனும் ஒரு காவற்காரன் பம்பி என்னுமொருவனுடன் அங்குச் சென்று துப்பாக்கியினாற் சுட்டான். ஜோனுத் என்பவன் உடனே வீழ்ந்து இறந்தான். ரிமொதியா என்பவன் அச்சத்துடன் அவ்விடத்தைவிட்டு ஓடி மறைந்து விஷயத்தை ஒருவருடனும் பேசாதிருந்தான். சில தினங்களின் பின் ஜோனுத என்பவனுடைய பிரேதம் அத்தோட்ட எல்லையிற் கிடக்கக்காணப்பட்டது. பக்கத்தில் இரண்டு வாழைக்குலைகள் கிடந்தன. அவனுடைய பிரேதம் தோட்டத்துள்ளிருந்து எல்லை வரையும் நிலத்தில் இழுக்கப்பட்ட அடையாளம் காணப்பட்டது.

சற்போதமஞ்சரி.

(வண்ணை நகர்
ஸ்ரீ க. வைத்தியலிங்கபிள்ளை
எழுதியது.)

மாநில மீது மன்னிய வுயிர்களைத்
தன்னுயிர் போலத் தண்ணளி யோடு
நீதிகோ டாது நேரலர் திருட
ராதிய வைந்து பகைகளு மகற்றிச்
செங்கோ லோச்சுந் திருவுறை வேந்தனும்
எட்டுணை யேனுந் தன்னய மின்றி
ஆக்கை மனது வாக்கிவை மூன்றையும்
அகிலத் தோர்கட் கர்ப்பணம் பண்ணி
அல்லும் பகலு மயர்ச்சியில் லாமல்
வருந்தி யுழைக்கு மகாத்து மாக்களுந்
தன்னுயிர் நீப்பினுங் கற்பைத் தணந்து
வாழா துலகின் மகிழ்நனே தெய்வ
மாமென வெண்ணி அவர்பணி புரிந்து
இரண்டு தலங்களும் பெருமையுற் றிலங்க
ஒழுகும் புகழ்சே றுத்தமி மாரும்
தன்மிலா விளைஞர் சம்பள மின்றிக்
கல்வி பயிலக் கலாசா லைகளை
வைத்து நடாத்தும் வண்மைசேர் செல்வரும்
நலனெடு சத்திர மமைத்துநல் கூர்ந்த
ஏழைகட் கன்ன மிட்டதா தாக்களும்
ஈன்றதாய் தந்தை யில்லாச் சிறுவரைப்
பெற்றபின் ளைகள்போற் பிரியமாய்வளர்த்து
வித்தைகற் பித்த மேதா வியர்களுங்
கூவல் கேணி தடாகமு தலாகிய
நீர்நிலை தொட்ட நிகரில்பே ரறிஞரும்
வெய்யிற் கொதுங்க மடந்தொடு விருட்சம்
வழியிரு மருங்கும் வைத்த மகான்களும்
அடியார் துழாங்க ளனுதினஞ் சென்று
வணங்கிட ஆலயம் வகுத்தநல் லாயரும்
எவ்வித இன்ன லெய்தினும் வாய்மையைக்
கைவிடா துறையுங் கலங்கா மனத்தரும்
வயங்குபல் கலைகள் கற்றுயர் மலையிற்
கொழுவிய சுடர்போற் றுவலயம் புகழ
நாற்கவி பாடும் பெருநா வலரும்
இரந்தவர்க் கேதுவு மில்லையென் னுமற்
சிந்தையன் போடு கொடுக்குந் தியாகியுந்
தன்னினும் வாய்மை பொறுமைசன் மார்க்கங்
கல்வி செல்வம் படைத்தகா தலனைத்
தவஞ்செய் தீன்ற சால்புறு தந்தையும்
நாயகன் முட னுயினும் அழகு
இல்லா தவனு யிருப்பினு மவற்கு
வழிபா டியற்றிக் கறபின் வழாத [னும்
மடந்தையை மனைவியாய் வதுவை செய்தோ
காசினி மீதி லெவர்களுங் கற்று
அறிவு விளங்க அருங்கா வியங்கள்
இயற்றிவைத்த தீட்ட எழிற்கவி வாணரும்
இத்தகை யான செய்கைக ளியைந்த
துகழிலா வுத்தமர் தூல வுடம்புகள்
போய்விட் டாலு மவர்புக ழுடம்பு
அகிலமீ தென்று மழிந்திடா வன்றே.

அடைவுநகைவிற்பனவு விளம்பரம்.

—:0:—

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச்சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண் கிழக்கு செ. நா. செ. சாமிநாதன் செட்டியாரிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி ஷை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1924ஆ செப்டம்பர்மீ

நம்.	திகதி	ரூபா	ஊர் பெயர்	நகைகளின் விபரம்.
4540	16	60	மானிப்பாய் சிதம்பரி சின்னத்தம்பி	பொன் கம்பிப்பூராணட்டியல் 1
4541	16	50	அச்செழு வயிரமுத்து கந்தையா	பொன் கம்பிப்பூராணட்டில் 1
4554	17	45	கொழும்புத்துறை சதாசிவம் குமாரசாமி	பொன் கம்பிப்பூராணட்டியல் 1
4570	21	90	அனலைதீவு கதிரேசு வேலாயுதர்	பொன் கம்பிப்பூராணட்டியல் 2
4576	22	70	கைதடி வேலுப்பிள்ளை இளையதம்பி	பொன் சங்கிலி அட்டியல் 1
4593	26	80	சுளிபுரம் முத்துக்குமாரகுரியர் குமாரகுரியர்	அமெரிக்கன் 2 பவுண்கொண்டலர் கோத்தசங்கிலி 1 நீலக்கல்மோதிரம் 1
4598	27	33	வண்மேற்கு சிற்றம்பலம் கந்தையா	பொன் கெட்டிச்சொலிசுக்காப்புச் சோ.1
4605	29	18	சிறுப்பிட்டி குட்டியர் சின்னத்தம்பி	பொன் குலைச்சுடுக்கன் சோடி 1 குதிரைமுழுத்தங்கப்பவுண் 1
அக்டோபர்மீ.				
4607	2	70	வண்மேற்கு சுப்பிரமணியம் சம்பந்தா	பொன் அவல்மாலை 1
4617	4	40	வேலணைமேற்கு வீரபத்திரர் கதிர்காமர்	பொன் முகப்பில்லாத கம்பிப் பூராணட்டியல் 1
4618	4	40	சோனகதெரு பீராசாகிபு பக்கிரி முகைதீன்	பொன் சவடிக்கொடி 1
4637	8	90	கரையூர் தேவசகாயம்பிள்ளை கைமபெண்டிக்டோரியா	பொன்குண்டுச்சங்கிலி1
4645	11	145	சிறும்பியடி வேலுப்பிள்ளை அமரசிங்கம்	பதக்கத்துடன் செட்டிப்பூராணட்டியல் 1 காப்பு முகப்புச் சோடி 1
4657	11	60	தட்டாதெரு வயிரமுத்து சிதம்பரநாதர்	பொன் சொலிசுக்காப்புச்சோடி 1
4669	13	25	கண்டிக்குளி சந்தியாப்பிள்ளை சவரிமுத்து	பொன் மோதிரம் 1
4672	14	15	வேலணை இராமுப்பிள்ளை நடராசா	பொன் மோதிரம் 1

விற்பனவு:—குரோதனஆ ஐப்பசிமீ 29உ (14-11-25) சனிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்டநகை புறநீங்கலாக மிகுதி ஷை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

அரு. செல்லையா உடையார்,
வெற்றிஸ்டேஸ்டர்.

(Mis 739)

இந்துசாதனம் பத்திராசிரியர் அவர்களுக்கு.

ஐயா,

இவ்வூரின்கண் திருக்கோவில் கொண்டருளும்கலியுகவரதராம், கந்தக்கடவுளின்,கந்த ஷஷ்டி உற்சவத்தின், பிரதம பாகமாகிய, சூரசம்மார உற்சவத்தன்று, தொன்று தொட்டு கடைத்தெருவிலுள்ள, சைவசமய வியாபாரிகள் இவ்விழாவை, பரிசுத்த தினமாகக் கருதி, சுவாமி, சூரசங்கார நிகழ்ச்சிக்காக வீதிவலம் வரும்பொழுது, கடைகளின் வாயில்களைமகரதோரணங்களாலும், வாழை, கமுகு முதலிய விருக்ஷங்களாலும் அலங்கரித்து, கும்பங்கள்வைத்து, சுவாமிக்கு, பட்டு முதலியவை சாத்தியும் அர்ச்சனை முதலியன செய்வித்து மகிழ்வதும், மறுநாள், இதற்கு உபகரணங்களாக உபயோகிக்கப்பட்ட வாழை முதலானவற்றை எடுத்துக்கடைகளுக்குப்பக்கத்தில் தெருவில் ஒதுக்கி வைப்பதும, அந்தக் குப்பைகளை, “லோக்கல் போர்” டார், வண்டிகளில் ஏற்றி அப்புறப்படுத்துவதும் வழக்கம். இவ்வருஷமும் சூரசம்ஹார உத்சவம், பல சைவாபிமானிகளின நன முயற்சியால் அதிக சிறப்பாக நடைபெற்றது. கடைகளும் வழக்கம்போலவே அலங்கரிக்கப்பட்டிருந்தன. இன்னும் கடைகளில் அலங்காரம் செய்த கதலி முதலானவைகள் பிரிக்கப்படாமலிருக்கும்போதே இங்கு, புதிதாக, சமீபகாலத்தில் நியமனம் பெற்றிருக்கும், வயோதிக பருவத்தினரான, லோக்கல் போர்டு இன்ஸ்பெக்டர் ஒருவர், மிகுசினங்கொண்ட நோக்குடைய தோற்றத்தினராய் கடைகளுக்கு வந்து, “இவ்வாழைமரங்களை யாரும், தெருப்பக்கங்களில் ஒதுக்கக்கூடாதெனவும், ஷை மரங்களில் எவை எங்கெங்கிருந்துகொண்டு வரப்பட்டிருந்தனவோ அவ்வவ்விடத்திற்கு, அவரவர்களேகொண்டு சேர்த்து விடவேண்டுமெனவும் அதிகார தோரணையில் உத்தரவளித்துச் சென்றாராம். அன்னார் பேசியபோது இவர் பருவத்தினருக் கனித்தாயுள்ள பலவீனத்தாலோ அன்றி கோபம் உச்சநிலையை அடைந்திருந்த காரணத்தாலோ, யாரும், கோபிப்பதைவிட்டு, பரிதாபப்படும்விதமாகஅவர்தோற்றம் இருந்ததெனின் பொருந்தும். பாவம்,— இவருக்கு மட்டும் சக்தி இருந்தால், வரிசெலுத்துவோர்கள், செய்த—அல்லது, செய்யவிருந்த, குப்பைகளை லோக்கல் போர்டாரைக்கொண்டு அள்ளுவிக்க எண்ணிய இந்தமகத்தான குற்றத்திற்கு தகுந்ததண்டனை தக்ஷணம் விதித்திருப்பார்—அரசாங்கத்தார் அனுவசியமாக நியாயச்சபை ஒன்று ஏற்படுத்தி, பலபகுதி உத்தியோகஸ்தர்களால் கொண்டுவரும் குற்றங்களை பரிசீலனை செய்து தண்டிக்கும் வழக்கத்தை, எடுத்து அந்தந்தப் பகுதி உத்யோகஸ்தரே தண்டனை விதிக்கலாமென்பதை ஆதரிப்பவர் போன்றிருந்தது அவர் தோற்றம் வாழைமரங்களை, திரும்ப, வெட்டிவந்த இடத்திற்குக்கொண்டு போய் புதைத்துத் தண்ணீர் ஊற்றிவரும்படி கட்டளை இடாதிருந்ததை நமது அதிஷ்டமென்றே கருதவேண்டும. அந்தோ! இவருக்குத் தான், வரிசெலுத்தும் ஜனங்களின் ஊழியன் என்றும்—ஜனங்கள் இவருக்கு ஊழியர் அன்று என்பதும் தெரியாதபோதும், அன்னாரை சேவகில் யாதுபயன்—“லோக்கல் போர்டு” பெரியார், இவைபோன்றவைகளைக் கவனித்து வேண்டுவன செய்து, பரிகரிக்கவேண்டியிருக்க—தாம் அவை ஸ்தானம் பெற்றவுடன் தம் கடமை முடிவுற்றதென நினைக்கும், பரோபகாரிகள் இருக்கும்வரை, இவ்வளவுதானோ நடக்கும்! உதாரணமாக, தெருக்களில நாட்டப்பட்டுள்ள, விளக்குகள், நிலவுபிரகாசிக்கும் இரவுகளில் இல்லாமலிருந்து, பிறகு, புதிதாகக்கொண்டுவந்து வைத்த இரண்டு நாட்கள் வெளிச்சம் தந்து, மூன்றுவது நாளிலிருந்து தினம் தினம், படிப்படியாகக் குறைய ஆரம்பித்து ஐந்தாம், ஆறும் நாள்களோடு அடியோடு முடிவடைந்து தெருக்களை இருட்படலமாக்குகின்றது.

ஐயோ! அந்த விளக்குக் கம்பங்களுக்கு மட்டும் பேசும் சக்திருயிந்தால், தனைப்பற்றியும், தான் இவ்வளவு ஈனஸ்திதியையடைந்த காரணத்தைப்பற்றியும், அதற்காக “லோக்கல் போர்டா”ரால் ஒதுக்கப்பட்ட பணத்தொகை எங்குப் போகிற தென்பதையுமபற்றிய விசித்திரமான கதைகளைக் கேட்கலாம். இதைவிட “லோக்கல் போர்டா”ருக்குச் செலவில்லாமல், இவ்விடம் காடுகளில் இரவில் காணப்படும் மினமினிப் பூச்சிகளைப்பிடித்து வந்து ஒருவிளக்குக்குப் பத்துவீதம் ஒட்ட வைத்தால், இப்போது அனுபவிப்பதைவிட அதிகமான வெளிச்சத்தை அடையலாமென்று நாம் ஆலோசனை சொல்லுகிறோம்.

இவ்விதமான ஊழல்கள் இனி ஏனும் நடைபெறாமல்தடுக்க, இதற்காக ஏற்பட்டுள்ள அங்கத்தார்கள் சிரத்தைக்கொள்வார்களெனப்பொதுஜனங்களால் எதிர்பார்க்கப்படுகின்றது.

அநுராதபுரம், நன்மைவிரும்புவோன்,
25-10-25

கயரோகவியாதி பரம்பவிடாமல் தடுக்கும் வழிவகை.

[ஒருவரெழுதி உதவியது]

பதிவுபகுதித் தலைவரின் அறிக்கைப்படி சென்ற ஐந்துவருட காலத்திலே இத்தீவில 19 333 க்குக் குறைபாத மரணங்கள் கயரோக வியாதியினுல் நேரிட்டன எனத் தெரிய வருகின்றது.

இவ்வியாதி பரம்பியிருத்தலை மதிப்பிட்டுக் கணிப்பதற்குப் பொதுவான பிரமாணம் ஒவ்வொரு மரணத்திற்கும் பத்து நோயாளிகள் விகிதம் கணக்கிட்டுக்கொள்வதேயாம் இம்மதிப்பை அநுசரித்து ஒவ்வொரு மரணத்திற்கும் ஐந்து நோயாளிகள் விகிதம் கணக்கிட்டுப் பார்த்தால் சென்ற ஐந்துவருடங்களிலும் இவ்வியாதியாற் பீடிக்கப்பட்டோர்களின தொகை 96,665 என்று காண்கிறோம். இது எவரையும் திடுக்கிடச் செய்யத்தக்க ஓர் தொகையாயிருக்கின்றது. பெருந் தொகையான சேமோசமும் சனசமூக மத்திடமும் எப்படி உண்டாகின்றதென்பது இதனுல் வெளிப்படையாய்த் தெரிகின்றது கயரோகவியாதி தொற்றுவண்ணம தடுக்கப்படக்கூடிய ஒரு நோய். ஆனுல் இந்நோய் இப்மாதிரி அதிகமாகப் பரந்து பிடிக்கிறதிலிருந்து சனங்களின சுகாதாரநிலை கீழ்த்தரத்திலிருப்பதாகத் தெரிகின்றது.

ஒஸ்லர் (Professor Osler) என்னும் வித்பன்னர், சனங்களின் சுகாதாரநிலை எவ்வளவுக்குக் குறைவாக இருக்கிறதோ அவ்வளவுக்கு நெருப்புக்காய்ச்சலும் அதிகரிக்குமெனபதாக ஒருமுறை நெருப்புக்காய்ச்சலைக் குறித்துப் பேசியபொழுது கூறியிருக்கிறார். இவ்வபிப்பிராயத்தையே கயரோகவியாதியைக் குறித்துஞ் சொல்லலாம்.

கயரோகம் ஒருவரிலிருந்து இன்னொருவருக்குத் தொற்றக்கூடிய நோய். இந்நோய் தொற்றுகிறதற்கு ஓர் வகுப்பைச் சேர்ந்த ரோகபீஜம் அல்லது நோயணுவே ஏதுவாயிருக்கிறது. இந்த ரோகபீஜத்திற்கே கொச்(Koch) என்பவர் “கயரோக பீஜ.” என்று பெயரிட்டார். இவ்வியாதி தேகத்திலேயுள்ள அநேக கருவிகளைத் தாக்குகிறது. சுவாசப் பையைத் தாக்கும்பொழுது அந்த நோயைக் “கசம்” என்று சொல்லுவார்கள். இந்நோயினுல் வருந்துபவர்களின் மலசலக்கழிவுகள் சளிகளிற் கயரோகபீஜம் காணப்படும். பிரதானமாக இச்செந்துக்கள் கயரோகவியாதியுடையவருடைய சளி அல்லது துப்பலிலேயே காணப்படுகிறது.

இன்றைக்கே தொடங்குவோமாக; இன்று தொடக்கமாகக் கயரோகவியாதி பரம்பாமல் தடைசெய்யக்கூடிய வழிவகைகள் ஒழுங்குகள் சுகாதாரமுறைகளைப்பற்றிக் கடிதங்கள் தொடர்பாக வெளிவரும்.

நீயும் உன்னுடைய குடும்பத்தாரும் கயரோகவியாதி பரம்பவிடாமற் றடுக்கும் வழிவகைகளைப் படித்து அறிந்துகொள்ள வேண்டும்.

கயரோகவியாதி பொதுவான சீலபரத்தில் உள்ளவர்கள் இலகுவில் உபயோகிக்கக் கூடிய வழிவகைகளாற் றடுக்கப்படக்கூடியதாயிருக்கிறது. “பலதுளி பெருவெள்ளம்” என்றது போல நீங்கள் ஒவ்வொருவரும் செய்யும் முயற்சிகள் இக்காரியங்களில் உதவுவன. அதிகாரிகளுக்கு உன்னுற்கூடிய அளவு உதவி செய்வது நீ உனக்கும உன்னைச் சேர்ந்த சனசமூகத்திற்கும் செய்யும் கடமையாகும். உலகத்தவர் சுகம் உன்சுகம். கயரோக வியாதியைத் தடுக்க முயற்சிசெய்யும் கூட்டத்தார் இந்நோயைத் தடுக்கத் தம்மாற்கூடியமட்டும் முயற்சி செய்துவருகிறார்கள். உன்னுடைய உதவியைக் கொண்டுதான அவர்கள் வெற்றிபெற வேண்டும். ஆனபடியால் நீயும் உனதுகடமையைச் சரியாகச்செய்வாயாக. இந்நோய்க்கும் அதனுல் பெறுபேறுக்கும் தோற்றும் இயல்பிற்குக் காரணமாயுள்ளது இந்தக் கயரோகபீஜம் தான்.

இந்நோயைத் தடுக்கக்கூடிய வழிவகைகள் மூன்று உண்டு. தொற்றவிடாமற் பாதுகாத்தலும் தொற்றிவிடாமல் நோய் தன் தொழிலைச் செய்யவிடாமல், தடைபண்ணுதலும் அல்லது அது தன் முழு உக்கிரத்தையும் காட்டவிடாமல் தடைபண்ணுதலுமாகிய இவைகளாம். இதற்கு மாருக இவ்வியாதி அதிஷ்டவீனமாக மேற்கொண்டுவிட்டால் அதைத் தடுக்கவேண்டிய வழிவகைகளைத் தேடவேண்டும். தடுக்க முடியாதுபோய்விட்டால் அந்நோயினுல் உண்டுபடும் வேதனையைக் குறைக்கக்கூடிய அளவு குறைத்துக்கொள்வதற்கென முயலவேண்டும்.

ஓர் கடுத்தரமான சனசமூகத்தாரில் இத்தொற்றுநோயாற் பீடிக்கப்பட்டவர்கள் நூற்றுக்கு 75 தொடக்கம் 90வரைக்குமான பெரிய தொகையாறேர் என்பதாகக் கணிக்கப்பட்டு இருக்கிறது இந்த நோய் எப்படித் தொற்றுகிறதென்று அறிந்திருக்கிறபடியால் நாங்கள் அதைத் தடுக்கக்கூடிய திட்டமான வழிவகைகளைச் செய்து கொள்ளலாம். நோய்கொண்ட தன்மை எவ்வளவுக்குக் குறைகிறதோ அவ்வளவுக்கு மரணவிகிதமும் குறையும்.

மேலே சொல்லப்பட்ட 100-க்கு 75 விகிதமானோரில் 2 விகிதமானோரில் நோய் சரியாகப் பிடித்திருக்கிறதாக எப்படியும் ஒருகாலத்திற் காணப்படுவார்கள்.

இப்பொழுது இருக்கிறபடிக்கு இந்த 100 பேர்களில் 8 பேருக்கும் 10 பேருக்குமிடையில் கயரோக வியாதியால் இறப்பது நிசம். நோய் தொற்றுவண்ணம் தடுக்க இயலாவிட்டாலும் எங்களால் கூடியஅளவு முயற்சிசெய்தால் ஓர் தொகையாறேர் அகால மரண மடைவதைக் கூடியளவு தடுக்கமுடியும்.

கயரோகத்தைத் தடுக்கிறதற்கு நாங்கள் கவனிக்கவேண்டியவைகள்:—

(1) சனங்களுக்குரிய சுகாதாரமுறைகள்:- இது சனசமூகத்தார் சுகத்தோடு சுகாதாரமாகச் சீவிப்பதற்காக வேண்டிய எல்லா ஏதுக்களையும் அடைந்துகொள்ளும்படி நாங்கள் செய்யும் எத்தனங்களைக் குறித்ததாயிருக்கிறது.

(2) ஒவ்வொருவரும் தனித்தனியே கவனிக்கவேண்டிய சுகாதாரமுறைகள்: நியம நடத்தையிற் சரியான முறைகளைப் பின்பற்றுவதற்கான எத்தனங்கள் அடங்கியவை ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் காரியங்களிற் கைக்கொள்ளவேண்டிய சுகாதார முறைகள்உண்டு. இவை மூன்று பிரதான பிரிவுகளாக விரியும். அவையாவன: சுயபழக்கமும், சுகாதாரமும், வீட்டுப்பழக்கவழக்கங்கள் சாப்பாட்டுப்பழக்க வழக்கங்களும்.

விசேஷவிபரங்களும் புத்திமதிகளும் நன்கறிந்துகொள்ள விரும்புவோர் கொழும்பிலிருக்கும் கயரோக வைத்தியசாலைக்கு எழுதி அறிந்துகொள்ளலாம்.

கிரேக்க பல்கேரிய யுத்தம்.

கிரேக்கருக்கும் பல்கேரியருக்குமிடையே யுத்தம் தொடங்கி நடப்பதாகத் தந்திச்சமாசாரங்கள்வாயிலாக அறியக்கிடக்கின்றது இந்த அக்டோபர்மீ 20௳ பல்கேரியாணுவத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் கிரேக்க கற்பித்தானையும் காவலாளரையும் துப்பாக்கியினாற் சுட்டுக்கொன்றமையே இந்த யுத்தத்திற்குக் காரணமாம். பல்கேரிய அரசாங்கத்தார் தம்மவர் செய்தமை பிழையென்றும் அப்பிழையைப் பொறுத்துக் கொள்ளும்படியும் கிரேக்கரைக்கேட்டனர். ஆனாற் கிரேக்கர் அதனைப் பொருட்படுத்தாது பல்கேரியாவுக்குத் தமது சைநியத்தை அனுப்பிப் போர்க்கறை கூவி நிற்கின்றனர். 48 மணிநேரத்துள் பல்கேரியர் பெருந் தொகை அபராதப்பணமிறுத்து, கற்பித்தானையும் காவலாளரையும் கொன்றவர்களைத் தண்டியாதொழியின் யுத்தம் ஆரம்பிக்கப்படுமெனக் கிரேக்கர் தெரிவித்திருக்கின்றனர். பல்கேரியருள் 5 காவலரைக் கிரேக்க சைநியம் கொன்றுவிட்டதாக அறிகின்றோம். மற்றுஞ்சாதியார் இந்த இருபாலாரையும் சமாதானமாக்கிவிட முயல்கின்றனர். கிரேக்க சைநியம் பல்கேரியாவிற்புகுந்து பிப்பறிற்ஸ் என்னும் பட்டினத்தின் மீது குண்டுப்பிரயோகஞ்செய்து பலரைக் கொன்றுவிட்டதாகவும் பிந்திய தந்திச்சமாசாரத்தினால் அறியலானோம். சென்ற ஜர்மனிய யுத்தத்தின்பின்னர் யுத்தமென்றால் எந்த வல்லமையுள்ள ராச்சியங்களும் அஞ்சும். இந்த இருபகுதியாருக்குமிடையே யுத்தம் நடக்குமானால் இதனால் எவ்வகையான தீமைகள் வருதல் கூடுமென்பதை இப்பொழுது சொல்லுதல் முடியாது. ஆனபடியால் சர்வசாதியசங்கத்தார் இவ்விருபாலாரையும் சமாதானமாக்கி விடுவரென்றே நினைக்கின்றோம்

உலகம் பலவிதம்.

நமது முருகேச பின் வருமாறு பேசுகின்றார்:

“நேற்றுப் பின்னேரம் நாலு நாலரை மணி தொடக்கமாக ஆடவரும் மகளிரும் சிறுவரும் சிறுமியரும் வித்தியாசாலை ஆசிரியர்களும் அதிபர்களும் உத்தியோகத்தர்களும வியாபாரிகளும் தத்தம் தகுதிக்கேற்பத் தங்களை அலங்கரித்துக்கொண்டு மோட்டர் பஸ் மார்க்கமாகவும் மோட்டாரதம் மார்க்கமாகவும் குதிரை வண்டி மாட்டுவண்டி றிக்ஷா, துவிச்சக்கரம் என்னும் இவைகள் வாயிலாகவும் நடந்தும் யாழ்ப்பாணக்கச்சேரிப்பக்கமாக அதிவிரைவோடு செல்லத் தொடங்கினர். இன்றைக்கு உங்கே என்ன விசேஷம் என்று தெருவழியே குதிரைவண்டிமார்க்கமாகச் சென்றவரொருவரை யான் விசாரித்தபோது, அவர் “அண்ணே, உமக்கு இது தெரியாதா! இன்றைக்கு 5 மணிபோல் சுண்டிக்குளியிலுள்ள கல்லூரியிலே வித்தியாகர்த்தரைச் சபைத்தலைவராகக்கொண்டு ஒரு மகா கூட்டம் நடக்கப்போகின்றது. அக்கூட்டத்திற்கு யாழ்ப்பாணத்துள்ள எல்லாக் கல்லூரிகளிலும் வித்தியாசாலைகளிலும் படிக்கும் சிறுவர்களும் சிறுமியர்களும உபாத்தியாயர்களும் சமுகஞ்செய்கின்றார்கள். அங்கே சிறுவர்களும் சிறுமிகளும் ஆடல் பாடல் முதலியவற்றை நடத்துவார்கள்; பார்க்க ஆனந்தமாகவிருக்கும்; நானும் அங்கேதான் செல்லுகின்றேன்; நீரும் வாரும்; இந்த வண்டியில் ஏறும்” என்றார். உடனே நானும் ஏறிக்கொண்டு அவருடன் சென்றேன்.

* * *

கூட்டம் தொடங்குவதற்குக் கால்மணித்தியாலமிருக்க, நாங்கள் சுண்டிக்குளிக் கல்லூரியை யடைந்தோம்; அங்கு நான் கண்ட காட்சியை என்னென்று சொல்லுவேன்; பல்லாயிரக்கணக்கான சனங்கள் புற்றீசல்போல் வந்தபடியே காணப்பட்டார்கள்; வந்தவர்களுள் ஆண்கள் கூடவோ, பெண்கள் கூடவோ, சிறுவர்கள் கூடவோ, சிறுமியர் கூடவோ, யார் கூட யார் குறைவென்று சொல்லுதல் முடியாமலிருந்தது; கூட்டம் ஆரம்பித்த அரை மணி நேரத்துக்கு முன்னியே கல்லூரிமண்டபத்தில் இடமில்லாமற் போய்விட்டது. கூட்டத்தை நடத்தும் அதிகாரிகளும் அத்தனைப் பெருந்தொகைச் சனங்கள் வருவரெனக் காத்திருக்கவில்லைப்போலும். மண்டபத்திலே ஆண்பாலார் ஒருபக்கத்தும் பெண்பாலார் ஒருபக்கத்தும் ஒருவாறு உபசரித்து இருத்தப்பட்டார்கள், சிறிது செல்ல வந்தவர்களை உபசரித்து இருத்துவதற்கு இடமில்லாதொழியவே உபசரித்துக்கொண்டுநின்ற வித்தியார்த்திகள் செய்வதின்னதென்று அறியாதவர்களாய்த் தியங்கினர். மாணாக்கர்களாயுள்ளவர்களெல்லாரும் மண்டபத்திலே நிலத்திலும் வாங்கின்மேலும் மேசைமீதும் ஜன்னல்களிலும் நின்றுகொண்டனர். மண்டபத்தின் புறத்தே எண்ணிறந்தோர் சூழ்ந்து எட்டிநின்றும் யன்னல்களில்ஏறிநின்றும் பார்த்தார்கள்.

* * *

நாடகமேடை நன்கு அலங்கரிக்கப்பட்டுத் திரை தொங்கவிடப்பட்டிருந்தது. 5 மணியாதலும் திரை அகற்றப்பட்டது. ஒரு அயிரோப்பிய மாதும் தலைமை வித்தியாதரிசியாகிய மிஸ்ரர் பெறிருவும் பியானோ என்னும் வாத்தியத்தை வாசித்தனர். சமுகமாயிருந்தோருள் அநேகருக்கு அவ்வாத்தியத்தின் சுவை தெரியாமையினால் அவர்கள் குறைகுற்றஞ் சொல்வதின்றியும் உவப்பு வெறுப்பின்றியும் சும்மாவிருந்தனர். அதன்பின் சுண்டிக்குளிச் சிறுமியர் வந்தனப்பாட்டை ஆங்கிலத்தில் நிரையே வந்துநின்று பாடிப் பின்னர் தமிழிலும் வாத்திய சகிதமாகப் பாடினர். இவர் செயல் விழிகளுக்கும் செவிகளுக்கும் மகிழ்ச்சியை உதவியது. அதன்பின் மத்திய கல்லூரி மாணவர் முற்பட்டு வந்து ஆடல் பாடல் செய்தனர். இதனைக் கண்ட சிலர் வியந்தனர்; சிலர் வாளாவிருந்தனர். பின்னர் இராமநாதன் கல்லூரிச் சிறுமியர் நாடகமேடையில் நிரையே வந்து யாழ்சகிதமாக நந்தனார் கீர்த்தனத்தைப் பாடிக் கும்மியடித்தனர். இவர்கள் ஆடல்பாடல்களை வந்திருந்தோர் மிக்க ஆர்வத்துடன் பார்த்தும் கேட்டும் களித்தனர் தமிழ்முறையான சங்கீதமணம் இவர்களிடத்து மாத்திரம் சிறிது தோன்றியது. இதன்மேல் ஒரு ஐரோப்பியமாது தோன்றி ஆங்கிலப்பாட்டைப் பாடத் தொடங்கவே, அப்பாட்டின் அருமையை அறியாத நம்மவர் தம்மிடத்திலே தோற்றிய சிரிப்பை அடக்க முயன்றனர். மாணாக்கருக்கு அப்பாட்டுப் பரிகாசத்துக்கிடமாயிருந்தது. அப்பாட்டு விரைவில் முடியவேண்டுமென்று சபையார் விரும்பினர்போற் புலப்பட்டது. அதன்பின் கத்தோலிக்க விடுதிப் பெண்பாடசாலைச் சிறுமியர் ஆடல்பாடல்களைச்செய்தனர். இவர்கள் செய்த ஆடல் சிறுவர்கட்கன்றிச் சிறுமியர்க்குரியது போற் புலப்படவில்லை. பின்னர் வேம்படி விடுதிச்சாலைச் சிறுமியர் ஆங்கிலத்திற் பாடினர்; குற்றமில்லை. அதனமேல் உடுவில் விடுதிச்சாலைச் சிறுமியர் சிறிது நீடித்தநேரத்திற்கு ஆடல்பாடல் செய்தனர். இது அதிகமாய்விட்டதென இருந்தோர் கூறினர். பின்பு சென்பற்றிச் கல்லூரிச் சிறுவர்கள் லத்தினிலும் ஆங்கிலத்திலும் பாட்டுக்களைப் பாடினர். இவற்றை யுணர்ந்தவர்கள் இவர்பாடலை மெச்சினர். ஏனையோர் வாளாவிருந்தனர்.

* * *

பின்னர் பருத்தித்துறை ஆங்கில தமிழ் வித்தியாசாலைச் சிறுமியர் அரங்கமேடையிலே தோற்றி ஆடியும் பாடியும் நின்றனர். இவர்கள் அதிபாலிகைகளாதலால் இவர்கள் செயலைச் சபையோர் உவப்புடன் ஏற்றுக்கொண்டனர்' அதன் பின்னர் ஒரு அயிரோப்பியமாது வந்துநின்று ஆங்கிலப்பாடல் பாடவே சபையிலே கேட்டுக்கொண்ட பள்ளிக்கூடச் சிறுவர் சிலர் அப்பாட்டின்மீது கொண்டுள்ள அபேட்சையினாலோ உபேட்சையினாலோ யாமறியோம், தாங்களும் அப்படியே சத்தஞ்செய்யத் தொடங்கினர். மாதுமனம் நொந்து உள்ளே சென்றனள். அதன் பின்னர் வேம்படி விடுதிச்சாலைச் சிறுமியர் வந்துநின்று ஆங்கிலப் பாட்டுப்பாடினர். பாடியபின்னர்த் தமிழிலே பாட்டுப்பாடிக் கோலாட்டமடித்தனர். இதனைச்சபையிலிருந்தோர் எல்லாரும் மெச்சினர். அதன்பின்னர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவர் வந்து தோன்றி இருநிரையே நின்றனர் இவர்களிடத்திற் சபையோர் அதிகமாகக் காத்திருந்தனர். இவர்கள் அரங்கமேடையிலே தோற்றியும் நெடுநேரம் சும்மா நின்றமையினால் சபையிலிருந்தோர் இவர்கள் செயலையிட்டுக் குறிப்புரை கூறத்தொடங்கினர். “பயந்துவிட்டார்களாக்கும்” என்றனர்சிலர். ஆயத்தமில்லையாக்கும் என்றனர் வேறுசிலர். புகைப்படம் எடுப்பிக்கும்பொருட்டு வந்து நிற்பார்போல் ஆடாமல் அசையாமல் நிற்கின்றனர் என்று ஒரு வாலிபன் கூறினான். பாடுகின்றார்கள் தூரத்திலிருப்பதனாற் கேட்கவில்லை. கிட்டவிருப்பவர்களைப் பின்பு கேட்டறிவோம் என்று ஒருமாது கூறிநகைத்தனள். இவர்கள் செயலையிட்டு நான் ஏதும் சொல்லப்புகின், பதார்த்தவாதி வெகுசனவிரோதி யென்றபடி வீண் மனஸ்தாபம் நேருமாதலால் யாதுஞ் சொல்லாது விடுகின்றேன். அதன்பின் சுண்டிக்குளிக் கல்லூரிப்பிள்ளைகள் ஆங்கிலப்பாட்டுப் பாடினர். இவ்வளவில் ஆடல் பாடல்கள் முடிந்தன. வித்தியாகர்த்தரின் நன்றிப்புரையோடு சபை கலைந்தது”

* * *

நேற்றைக் கூட்டத்திலே நிகழ்ந்தவைகளைப்பற்றிச் சிந்திக்குமிடத்து, தமிழ் மக்களாகிய நாங்கள் எப்படி எங்கள் சாதியாசாரம் சமயாசாரம் புராதனபழக்கவழக்கம் நடையுடைபாவனை பாஷாபிமானம் என்னும் இவைகளை இழந்து அந்நிய உடைநடைபாவனைகளைப் பின்பற்றினோமோ, அப்படியே எங்கள் அரியபழையபூரணமான சங்கீதத்தையுங்கைவிட்டுநகைப்புக்கிடமான அந்நிய சங்கீதமுறையைக் கைக்கொண்டு இடர்ப்படலானோமென்பது நன்கு விளங்குகின்றது. இந்தியாவிலே படித்தபெண்களுள எத்தனையோபேர் சிறந்த வித்துவாம்சைகளாகவும் புலவர்களாகவும் ஸ்ரீமதி சரோஜினிதேவி போன்ற தேசாபிமானிகளாகவும் விளங்குகின்றார்கள். அங்குள்ள பெண்கள் படிக்கப் படிக்க அவர்களிடத்துப் பழைய சீர்திருத்தமும் அபிமானமும் வளருகின்றனவே; இவர்கள்படிக்கப்படிக்க அவை தேய்கின்றனவே. இதற்குக்காரணம் இங்குள்ள பெண்பாலார்க்கு ஊட்டப்படும் கல்வியேயாம்; சுருங்கச்சொல்லுகில் மூலையில் மரியாதையாக இருந்த பெண்களை அம்பலத்தில் இழுத்து விட்டதே அறுதியென விளங்கக்கிடக்கின்றது” என்று நமது முருகேசு பேசிமுடித்தார்.

காலநிலை.

விடாமழை பெய்கின்றது. குளிர் அதிகம்.

காரைநகர்ச் சைவ மகாசபை.

இச்சபையின் ஆதரவின் கீழ் நிகழும் குரோதனஞு ஐப்பசிமீ 8௳ (24-10-25) சனிக்கிழமை பிற்பகல் ஐந்துமணியளவில் சைவ மகாசபைச் சபா மண்டபத்தில் ஸ்ரீமத். நாகலிங்கஸ்வாமிகளால் காரைக்கால் அம்மையார் திவ்வியசரித்திரம் பக்கவாத்தியசகிதமாய்ப் பிரசங்கம் செய்யப்பட்டது.

மூழ்கி இறவாவண்ணம் காப்பாற்றப்பட்ட மாணவர்.

சென் தொமஸ்கல்லூரிமாணவர் எழுவர் கல்லூரிக்குப் பக்கத்துள்ள கடலில் நீராடச்சென்று எட்டாத்தண்ணீரில் அகப்பட்டுத் தத்தளித்துச் சத்தமிட்டனர். அவர்களின் அதிஷ்டவசமாக அபயக்குரல்கேட்ட கனம். ஆர். என் டி சேரம் அவர்கள் கடலிற் குதித்து அதிகபிரயாசத்துடன் அவர்கள் எல்லோரையும் கரையிற் கொண்டு வந்து சேர்த்தனர்.

பரிசளிப்புக் கூட்டம்.

இந்த ஐப்பசிமீ 15-௳ (31-10-25) சனிக்கிழமை பிற்பகல் ஐந்துமணியளவில் கோண்டாவிற் சைவ வித்தியாசாலைப் பரிசளிப்புக் கூட்டம் கௌரவ ஸ்ரீ. துரைசுவாமியவர்களின் அக்கிராசனாதிபத்தியத்தின்கீழ் ஷை வித்தியாசாலையில் நடைபெறும். அத்தருணம் கௌரவ ஸ்ரீ சு. இராசரத்தின மவர்களால் உபந்நியாசம் செயயப்படும்.

முன்னொருபோதுமில்லாத சண்டமாருதம்.

பாசியகுடாவில் நிகழ்ந்த பெருமோசத்தைப் பற்றிச் சென்றபத்திரிகையில் வெளியிட்டுள்ளோம். சண்டமாருதத்துடன் உக்கிரமான பூகம்பமும் நிகழ்ந்தது. பார்சியகுடாக்கடலிலுள்ள முத்துக்குளிக்கும் தோணிகள் திசைபெயர்த்துக் கொண்டுபோகப்பட்டன. அவற்றுள் இருநூறு தோணிகள் அழிவாய்ப்பட்டன யுத்தக்கப்பல்களில் ஒன்றைக்காணவில்லை, தாம் கென்ஜாம் என்னும் தீவுகளும் படுசேதமடைந்தன. பஜாருவிலுள்ள பேரீச்சமரத்தோட்டங்கள் அழிந்தன.

உக்கிரமான புயல்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை பல்ரிமோர் என்னுமிடத்தில் உக்கிரமானபுயல் அடித்தது. அமெரிக்க படைக்குரிய பதினேழு ஆகாய விமானங்கள் சேதமுற்றன. சிவமோசமில்லை. நியூயோர்க்கின் தென்கீழ்ப்பகுதி அதிக சேதமுற்றது. அல்பமாவில் பதினாறு பேர் புயலினால் மோதுண்டு இறந்தனர் அநேக வீட்டுக் கூரைகள் பெயர்த்து வீசப்பட்டன. துறைமுகத்திலுள்ள மரக்கலங்களும் அதிக சேதப்பட்டன.

பெல்ஜிய தேச அரசர்.

பெல்ஜிய தேச அரசரும் அரசியும் இலங்கையைத் தரிசிக்கும்போது அவர்களை உபசரிக்கும் பொருட்டுக் கொழும்புத் துறைமுகமும் பிற இடங்களும் விசேடமாக அலங்கரிக்கப்பட்டன. ஷை அரசரும் அரசியும் உத்தியோக முறையில் இலங்கையைத் தரிசியாமையினால் விசேட கொண்டாட்டங்கள் நடைபெறவொண்ணாதென அரசரின் மெய்காப்பாளர் முற்தந்திச் சமாசாரத்தை அனுப்பினர். ஆகவே ஆங்குச் செய்யப்பட்ட முயற்சிகளும் பணமும் வீணாயின. அரசரும் அரசியும் கொழும்பில் இறங்கி இராணிமாளிகைக்குச் சென்றார்கள். அவர்கள் அன்று நாலுமணியளவில் [illegible]சாலையைத் தரிசித்தபின் ஏழேகால் மணியளவிற் கண்டிக்குப் புறப்பட்டனர் அவர்கள் அங்குள்ள இடங்களைத்தரிசித்தபின் கொழும்புக்குமீண்டு ஐரோப்பாவுக்குப் பிரயாணமாயினர்.

மலைச்சரிவு.

சென்ற சனிக்கிழமை மாத்தளையிலே அதிக மழைபெய்தமையினால் கிக்கசெட்டைத்தோட்டத்திலுள்ள மலையில் ஒரு சிறுபாகம் பிரிந்து வீழ்ந்தது அதன்பக்கத்தில் வேலைசெய்து கொண்டு நின்ற கூலியாள் ஒருவனுடைய கால் நொருங்கியது.

பல்லாக் கொலைவழக்கு.

இந்தூர்ச் சமஸ்தானத்திலிருந்த மும்தாஸ்பீகம் என்னும் நாட்டியமாது காரணமாக நிகழ்ந்த கொலைவழக்கில் இந்திய உயர்தர நீதிமன்றத்தாராற் தண்டனை விதிக்கப்பெற்ற எதிரிகள் “பிறிவிக்கவுன்சி”லுக்கு மனுப்பண்ணியிருந்தனர். இம்மனு சென்ற திங்கட்கிழமை விசாரணை செய்யப்பட்டுத் தள்ளப்பட்டது.

சிலாபத்திலே சமயக் கிளர்ச்சி.

சிலாபத்திலே பட்டினபரிபாலனசங்கம் இதுகாறும் தனது காரியஸ்தானமாகவிருந்த கட்டிடத்தை விடுத்து சென் அந்துறாஸ் விடுதிச்சாலையைத் தனது காரியஸ்தானமாகக் கொண்டது. அச்சங்கச் சபாநாயகராகிய கௌரவ மிஸ்ரர் என். ஜே. மாட்டின் என்பவருடைய அழைப்புக்கிணங்கி ஓர் கத்தோலிக்க குரு அங்குச் சென்று ஷை சங்கப் பிரவேசத்திற்கு முன் சில கிரியைகள் செய்துமுடித்தார். சங்கச் சபாநாயகரும் அவருக்கு உதவியாக நின்றனர். இச் செயல் அங்குள்ள அங்கிலிசியருக்கும் பிறசமயத்தவருக்கும் அதிக மனஸ்தாபத்தை விளைத்தது ஒவ்வொரு சமயத்தவரும் தத்தம் சமயத்துக்குரிய குருமாரைக்கொண்டு பிரவேசக்கிரியை செய்யவேண்டுமெனக் கிளர்ச்சி செய்யத் தொடங்கினர். கௌரவ மிஸ்ரர் மாட்டினது செயலையிட்டு அங்கு அதிக மனஸ்தாபம் உண்டாயிருக்கிறது. எல்லாச் சமயத்தவர்களுக்கும் பொதுவாயுள்ள ஒரு சங்கத்துக்குரிய கட்டிடப் பிரவேசத்தில் இங்ஙனம் நிகழ்ந்தமை தவறானதாகும்.

மருகன்மாமியைக்கொலைசெய்தமை

சென்றவெள்ளிக்கிழமைஇரத்தினபுரிக்குச் சமீபமாயுள்ள கல்கடுவாத்தோட்டத்திலே மருத்தினு என்னுமொருவன் ஓரடிப்பாதையிற் செல்லும்போது நெடுநாளாகப் பழிவாங்கக் காத்திருந்த தன்மாமியைச் சந்தித்து அவளது தலையில் ஓர்கட்டையினால் இருமுறை அடித்தான். அப்பெண் உடனே நிலத்தில்வீழ்ந்து தன்னை இனிமேற் சருவவேண்டாமென்று இரந்து வேண்டினள். மருத்தினு என்னும் மருகன் அவள்வார்த்தையை அலட்சியப்படுத்தி தன்னிடமுள்ள ஓர் நீண்ட கத்தியினால் அவளுடைய கழுத்தை வெட்டித் தலையை வேறாக்கினான். இதற்கிடையில் அங்குச் சென்ற சிலர் அவனைப் பிடிக்கச் சென்றபோது அவன் அதிவேகமாகஓடி அந்தக்கத்தியினாலே தன்னுடைய கழுத்தையும் வெட்டித் தற்கொலைசெய்ய முயன்று கத்தியினாற் குற்றினான். தொடர்ந்துசென்றோர் அவனைப்பிடித்து வைத்தியசாலைக்கு அனுப்பினார்கள். மாமியைக் கொன்ற மருகன் அங்கு ஆபத்தான நிலையிற்கிடக்கின்றனன்.

மாத்தளையில் அதிக மழை.

சென்ற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மாத்தளையில் அதிக மழைபெய்தது. அப்பொழுது ஒரு பெரும் புயலும் அடித்தது. பதினைந்து அடி நீளமும் எட்டடி குறுக்களவுமுள்ள ஒரு மரம் வெள்ளத்தில் அள்ளுண்டு அங்குள்ள பிரதான வாய்க்கால் ஒன்றிற் புகுந்து வெள்ளப் பாய்ச்சலைத் தடைப்படுத்தியது. வெள்ளம் கடைவீதிகளைத் தன் கீழ்ப்படுத்தி அதிவிரைவில் கடைகளுட் புகுந்தது. அது கடைகளிலுள்ள அரிசிமூடைகளையும் பிறவற்றையும் வாரிக்கொண்டு சென்றது. பட்டுப் புடவை வியாபாரஞ்செய்யும் ஒரு வியாபாரியின் 9000 ரூபா பெறுமதியான சீலைகள் சேதப்பட்டன. ஒரு செட்டியாரின் ஐந்நூறு ரூபாவுள்ள பணப் பெட்டியை வெள்ளம் பின்பக்கக் கதவு வழியாகக் கொண்டுபோனது. பொலீசர் அங்குச் சென்று அதிக சிரமத்துடன் வாய்க்காலை அடைத்துள்ள மரத்தை எடுத்தார்கள். பின்னரும் வெள்ளம் தடைப்படுவது கண்ட பொலீசர் அதன் பக்கத்துள்ள வீட்டை உடைத்து அதன் வழியாக வெள்ளத்தைப் பெருகச் செய்தார்கள். ஒரு கைக்குழந்தை தாயிடமிருந்து தவறி வெள்ளத்தில் அள்ளுண்டது. அங்கு நின்ற தோட்டத் தலைவர் ஒருவர் அக்குழந்தையை மீட்டனர். அங்குள்ள தெருக்கள் எல்லாம் அதிக சேதமுற்றன. யானைமேல் ஊர்ந்து சென்ற ஒருவர் யானையின் அடி சறுக்கியமையினாற் கீழே வீழ்ந்து வெள்ளத்தில் அள்ளுண்டனர். தோட்டக்கூலி ஒருவன் நீரில் மூழ்கி இறந்தனன். ஒரு பெண்ணும் இரு பிள்ளைகளும் வெள்ளத்தில் அள்ளுண்டனர்.

னை நியதி என்னும் இலையின்றிப் பிற ரதியக் குதித்திவர். சமயதீக்ஷை பெற்ற சிலர் மாமிசபோசனஞ் செய்கின்றனர். அவருள்ளும் சிலர் விரதம் முதலான விசேடகாலங்களில்மாத்திரம் மாமிசபோசனத்தை நீக்கிக் கொள்ளுகின்றனர். மாமிசபோசனிகள் சமயதீக்ஷை முதலியன பெறுதலும் பஞ்சாக்ஷரசெபஞ்செய்தலும் புராணம் முதலானவற்றை ஆலயங்களிலேனும் திருமடங்களிலேனும் வாசித்தலும் பொருள் சொல்லுதலும் பிறவும் பொருந்தாவாம். இவர்கள் சைவசமயிகளென்றுசொல்லுதற்கும் அருகரல்லர்.

இன்னோரன்ன பல விபரீதக்கொள்கைகள் மலிந்தமையானும் சமயாபிமானமின்மையானும் சமயக்கல்வி ஊட்டப்பெறாமையானும் எமக்குரிய சமயதீக்ஷையும் அதன்வாயிலாகப் பெற்றுக்கொள்ளும் பஞ்சாக்ஷர உபதேச முறைகளும் ஈனஸ்திலை எய்தின. இனி இக்காலத்துள்ள பெற்றோரும் தங்கள் சிறுவர் சிறுமியர்க்கு அவை வேண்டுமென்பதில் அதிகசிரத்தை பூண்டாரல்லர். எமது சமய நூல்களில் விதிக்கப்பட்டனவும், பல்லாயிரம் வருடங்களாகச் சுருதி யுக்தி அனுபவம் என்னும் இவற்றில் தேர்ந்த இருடிகளாலும் பிறாராலும் சிரத்தையோடு அனுட்டிக்கப்பட்டனவும், என்றும் பெரியோர்-அறிவுடையோர் என்னும் முறையில் வைத்து எண்ணப்படுவோரால் போற்றிக் கைக்கொள்ளப்படுவனவுமாகும்ஐந்நாழிகைக்குமுன் நித்திரைவிட்டெழுதல், ஸ்நானஞ் செய்தல் வந்தனை செபம் தியானம் வழிபாடு முதலியன செய்தல் என்னும் இவை முதலானவும் குருட்டு நாகரிகப் படையெடுப்பினாலும் விபரீதக்கல்வி முறையினாலும் இடறப்படலாயின.

மேனாட்டார் வருடத்தின் பெரும்பான்மையான பாகம் அதிகங் குளிரினால் வருந்துபவர். அவ்வக்காலத்துக்கு எவை யெவை தக்கன வென அவர்களுக்குத் தென்படுகின்றனவோ அவற்றையெல்லாம் அவ்வவ்வேளை அனுசரிக்கும் இயல்புடையவர். அவர்கள் தினந்தோறும் ஸ்நானஞ் செய்யாதவர்கள்; அசுத்தத்தைப் போக்குவதற்காகக் காகிதத்தை உபயோகிப்பவர்கள். காகிதம் இல்லாதிருந்தகாலத்தில் அதுவும் இல்லையெனலாம். இன்னோரன்ன முறைகளைக்கைக்கொள்வோர் எமதுநாட்டில் ஆதிக்கம் பெறுதலால் கண்ணுள்ளவன் குருடனைப் பின்பற்றிநடப்பதுபோல நம்மவர்கள் அவர்களைப் பின்பற்றத் தொடங்கினர். காலகதியில் சிலர் மேனாட்டுக் கொள்கைகளில் நம்பிக்கை யுடையராயினர். தினந்தோறும் அதிகாலையில் ஸ்நானஞ் செய்வதால் தேகம் இளைத்துவிடுமென அவர்கள் கூற, அது இவர்களுக்கும் அங்கீகாரமாயது. உலகில் நடைபெறுங் கருமங்களையெல்லாம் யந்திரவாயிலாகச் செய்து முடிக்கவேண்டு மென்னும் பேராசையுடைய அவர்கள் தேகத்தையும் ஓர் யந்திரமாகக்கருதி நித்திரைவிட்டெழுமுன் தேநீர் அல்லது காப்பி அல்லது வேறேதும் பானவகை உட்கொள்ளவேண்டும்; இல்லையேல் யந்திரம் அதிவிரைவிற் கேடுறும் எனலும் அதனையும் நம்மவர் சிலர் பின்பற்றினர்.

நித்திரை செய்யும்போது வாயில் ஊறுகின்ற நீர் துர்நாற்றமுடையதும் நச்சுத்தன்மை யுடையதுமெனக் கண்ட நம் முன்னோர் அதனைப் போக்கும்பொருட்டு அதிகாலையில் தந்தசுத்திசெய்து வாயைப் பன்முறை சுத்தப்படுத்தவேண்டுமெனப் பிரமாணங்களை விதித்தனர். வாய்நீர் துர்நாற்றமும் நச்சுத்தன்மையும் பொருந்தியிருப்பதை நாமும் அனுபவத்திற் காண்கின்றேம். நூல்கள் கூறியும் பெரியோர் அனுசரித்தும் நாமும் பிரத்தியட்சமாகக் கண்டும் அவற்றை விடுத்து மேல்நாட்டு முறைகளைக் கொள்வது எவ்வளவு அறிவீனமாகும். அதிகாலையில் ஸ்நானஞ் செய்வதாலும் சமயதீக்ஷை பெற்று அதனை முறைப்படி அனுஷ்டிப்பதனாலும் அவர்களின் தேகம் இளைத்துவிடுமென்றும், சீவனஞ் செய்யும் மார்க்கமின்றித் தெருவழியே திண்டாடித்திரியும் இக்கால விபரீதக்கல்வி அலட்சியஞ்செய்யப்பட்டுவிடுமெனவும்சிலபெற்றார் அபிப்பிராயப்படலாயினர். இன்னோரன்ன விபரீதக் கொள்கைகள் இக்குலத்து ஒவ்வொன்றாக நம்மவரைப் பற்ற அவர்கள் அவைகட்கு இரையாயினர். (வரும்)

மலைநாட்டில் அதிகமழை.

மலைநாட்டில் அதிகமழை பெய்தது. கடுகன்னாவை ஸ்தானத்துள்ள இருப்புப்பாதையில் வெள்ளம் புகுந்தது. அல்கலாயுக்கும் றம்புக்கனைக்கும் இடையிலுள்ள இருப்புப்பாதை வெள்ளத்தினால் மூழ்கியது. சிற்றுல்காலத் தெருவில் நிலச்சரிவுண்டாயது. புகையிரதப் போக்குவரத்துத் தடைப்பட்டது.

மனைவிகொலையுண்டமை.

மாமி சிறிதுவேளையில் இறந்தனள்; மாமன் ஆபத்தான நிலையிலிருக்கின்றனன்.

சென்ற வெள்ளிக்கிழமை வதுளைக்குச் சமீபமாயுள்ள கொத்தகாமா என்னுமிடத்திலே ஜின்பண்டா என்னும் ஒருவன் குடும்பசச்சரவு காரணமாகத் தனது மனைவியின் கழுத்தை வெட்டிக் கொன்றான். அதன்பின் அவன் அதிக கோபாவேசமுடையவனாய் வீட்டினுள் ஓடிச் சென்று தமது மாமியைப் படுகாயப்படுத்தி, மாமனையும் மைத்துனனையும் குத்தினான். காயப்பட்டோர் துனுகலாவைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டார்கள். மாமியும் சிறிதுவேளையில் இறந்தனள். மாமன் ஆபத்தானநிலையிற் கிடக்கின்றனன்.

உடும்புவேட்டையில் யானை இடறியமை.

சென்ற சனிக்கிழமை இரண்டு கூலியாட்கள் புத்தளத்திலிருந்து அனுராசபுரத்துக்குப்போகும் தெருவில் ஐந்தாவது மைலுக்குப்பக்கத்துள்ள காட்டினுள் உடும்பு பிடிக்கச்சென்றார்கள். அவர்கள் இருநாய்களின் உதவியைக் கொண்டு ஒரு உடும்பை அதிகதூரம்தொடர்ந்தபின் ஒரு யானையைச் சந்தித்தார்கள். ஒருவனை யானை இடறிக்கொன்றது மற்றவன் ஒருவாறு தப்பி ஓடினன்.

மகமதியரின் சமயாபிமானம்.

இலங்கையிலுள்ள மகமதிய உத்தியோகத்தர் வெள்ளிக்கிழமைகளில் தமது மார்க்கப்படி தவறாது பள்ளிக்குச் சென்று வணங்கவேண்டுமென்றும், அதன்பொருட்டு அரசாங்க உத்தியோகசாலைகளிற் கடமை பார்ப்போருக்கு விடுமுறை கொடுக்கவேண்டுமென்றும், அதிகசிரமப்பட்டு உழைத்துவந்தனர். இந்தவிஷயமாக மகமதிய பிரதிநிதிகளில் ஒருவராகிய கௌரவ மிஸ்ரர் ரீ. பீ. ஜாயா அவர்களும் தக்கவாறு முயன்றுகின்றனர். இதன பயனாக அரசினர் மகமதிய உத்தியோகத்தருக்கு வெள்ளிக்கிழமைதோறும் பகல்பன்னிரண்டேகால்மணிநேரம்தொடக்கம் பிற்பகல் ஒன்றேமுக்கால் மணிவரையும் விடுமுறை கொடுக்கவேண்டுமெனத் தங்கீழுள்ள உத்தியோகப்பகுதித் தலைவர் எல்லோர்க்கும் ஓர் சுற்றுநிருபம் விடுத்திருக்கின்றனர். அச்சுற்றுநிருபம் அங்ஙனம் விடுமுறை பெறும் மகமதிய உத்தியோகத்தர் உத்தியோகமுடிவுநேரமாகிய நாலரைமணிக்குப் பின் கடமைபார்த்தல்வேண்டுமென்பதைக் குறிப்பிடாவிட்டாலும், வேண்டுமாயின் அவ்வவ்வுத்தியோகத்தான தலைவர் தம்கீழுள்ள மகமதிய உத்தியோகத்தரை நாலரைமணிக்குப்பின் கடமைபார்க்கும்படி கட்டளையிடலாகும்.

சென்னைச் சைவபரிபாலன சபை.

திருவாசகப்பதிப்பு.

சென்னையில் பல பாகங்களிலுள்ள சைவ சபைகளின் பிரதிநிதிகளடங்கிய "சைவபரிபாலன சபை" எனப் பெயரிய பொதுச்சபை யொன்று தாபிக்கப்பட்டுச் செவ்வனே நடைபெற்று வருகிறது. இச்சபையார் சென்னையிலும், அதற்கணித்தாயுள்ள ஊர்களிலும், ஏழைகள் வசிக்கும் இடங்களிலும் சென்று சமயசம்பந்தமான உபந்நியாசங்கள் செய்து மக்களை நல்வழிப்படுத்தி வருகிறார்கள்.

சைவ சமயிகளாகிய நாங்கள் தமிழ்வேதத்தை அச்சிட்டுக் குறைந்த விலைக்குக் கொடாததினாலேயே சைவ சமய உண்மைகள் ஏழை மக்கள் வசிக்குமிடங்களில் பரவாமலிருக்கின்றன. அவ்வுண்மை யுணர்ந்த பல அன்பர்களின் வேண்டுகோட்கு இணங்கிச் சைவபரிபாலன சபையார் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த தமிழ் வேதமாகிய திருவாசகத்தைப் பதினாயிரம் பிரதிகள் நல்ல காகிதத்தில் சுத்தப் பதிப்பாக அழகுபெற அச்சிட்டு இலாபங் கருதாது புத்தகம் ஒன்று அசல் விலை இரண்டணாவிற்கே கொடுக்கத் தீர்மானித்துள்ளார்கள். 10,000 பிரதிகள் அச்சிட ரூ 1500/- வரை வேண்டியதாயிருக்கிறது. முற்பணமிட்டு அச்சிட சபையில் மூலதனம் கிடையாததலால், சமயாபிமானமுள்ள 150 அன்பர்கள் ஒவ்வொருவரும் ரூ 10- முற்பணம் அனுப்புவார்களாயின், புத்தகம் அச்சிட்டு முடிந்தவுடன் பத்து ரூபா அனுப்பியவர்கட்கு 80 புத்தகங்கள் அனுப்பப்படும். அவ்வெண்பது புத்தகங்களையும் அவ்வவ்விடங்களில் புத்தகம் ஒன்று இரண்டணாவிற்கு விற்றுப் பரவச் செய்து நஷ்டமடையாமலிருக்கலாம்; அல்லது தானமாகக் கொடுத்துப் புண்ணியம் பெறலாம். ஒரு புத்தகம் வேண்டிய வெளியூர் அன்பர்கள் 4 அணா தபால் முத்திரை முன்னதாக அனுப்பவேண்டும். இப்புண்ணியச் செயலுக்குச் சமயாபிமானமுள்ள செல்வர்கள் எவரேனும் நன்கொடை யளிப்பின் அன்போடு ஏற்றுக் கொண்டு அவர்கள் பெயரைப் புத்தகத்தில் பதிக்கப்படும். விரைவில் அச்சிட்டுப் பூர்த்தி செய்ய எண்ணியிருப்பதால் முற்பணம் அனுப்புவோர், சென்னை கோமளீஸ்வரன் பேட்டை "லோகோபகாரி" பத்திராசிரியரும் சைவபரிபாலனசபை உபதலைவருமாகிய பரலி சு. நெல்லையப்ப பிள்ளை அவர்கள் விலாசத்திற்கு அனுப்பவேண்டுமென்று அச்சபைக் காரியதரிசி அறிவிக்கிறார்.

மத்தியமாகாணச் சைவமகாசபை.

நிகழும் குரோதன ஆண்டு புரட்டாதிமீ 26உ (11-10-25) ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணியளவில் கண்டித்தமிழ்மண்டபத்தில் திரு. வெ. மு. சரவணமுத்து (நியாயதுரந்தரர்) அவர்களினது தலைமையின்கீழ் தேவாரபாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயது. 30 பேர்வரையில் சமுகமளித்திருந்தனர்.

குரோதன ஆண்டு ஆவணிமீ 21உ (5-9-25) சனிக்கிழமை நடாத்தப்பட்டகூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்புகள் வாசிக்கப்பெற்றுச் சபையாரால் அங்கீகரிக்கப்பெற்றன.

திருவாளர் பொ. பாலசிங்கம் (நியாயதுரந்தரர்) அவர்கள், "கற்றதனாலாயபயனென்கொல்வாலறிவன்நற்றாள் தொழாஅரெனின்" என்னும் பொருள்பற்றி ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினர். அவர் கற்றலினால் பெறும் பயன்கள் முதலிலே பிரத்தியட்சமாக எங்கள் உடம்பை வளர்ப்பதற்காக வழிகாட்டுகிறதாகவும், பின் உலக போகபாக்கியங்களுக்கு வழிகாட்டுகிறதென்றும், ஆனால் கற்றலின் விசேஷபலன் இம்மையிலே நிலையற்றபொருட்களில் பற்று வையாது அவைகளைத்தவிர்த்து மறுமை இன்பமாகிய சிவலோக பதவி அடைதலேயாமென்றும் கூறி மறுமை இன்பத்தைத் தரும் விதத்தைப் பின்வருமாறு விரித்துரைத்தனர், அதாவது, கல்வி கற்க அறிவு விளங்குகிறது; அறிவு விளங்க மாயையின்மயக்கத்தை அறிந்து அதனை நீக்கிப் பிரபஞ்சத்திலேயிருக்கும் இருதிறப்பொருள்களாய்த்தோன்றுவனவற்றில் அவ்விருதிறம் காணாது இருமை ஒப்பு உண்டாகின்றது. ஆகவே மானுடரைப் பற்றியிருக்கும் மாயாமலமும் நீங்குகிறது. அதன்பின் ஆணவமலத்தையும் படிப்படியே நீக்குகிறது. இப்படியே நீக்குவதற்குக் கேவலம் மானுடரால் முடியாதென்றும் இவர்களுக்குமேலாக இருக்கும் இறைவன் ஒருவனிருக்கிறானெனவும், அவன் கருணைக்கடலென்றும், வேண்டுதல் வேண்டாமையிலான் என்று கூறியிருப்பினும், கேவலம் எம்பொருட்டே பிச்சையாண்டியாய்க்கபாலவோட்டுடனவாழ்வு அநித்தியமென்று காட்டி அது அழியுமுன்னே மறுமைப்பயனைப்பெறவேண்டுமென்றும், தனக்கு எங்கள் ஆன்மபோதத்தைப் பிச்சையாய் வழியவந்துகேட்கிறானென்றும் நாமே அவன்பக்கம் பாராது திரிகிறோமென்றும் கூறி இனியாகுதல் அவன்வழித்திரும்பவேண்டுமென வேண்டினர். ஆகவேதெய்வப்புலமைத்திருவள்ளுவனார் கூறிய அச்சிறு குறளுக்குள் இப்பரந்த பொருளையே யடக்கிக்கூறியுள்ளாரென்று காட்டினார். அதாவது கற்கவேண்டியன கற்றும் அறன்வழி ஒழுகல்வேண்டுமென்றும், அறன் வழி ஒழுகி இறைவனை வணங்கி எங்கள் ஆன்மபோதத்தை அவனுக்குக் கொடுத்து அவனபதி போதத்தைப் பெறுவதேயாம்.

இவற்றோடு இக்குறளிலே பசுக்கள் அதாவது ஆன்மாக்கள் அநேகமென்பதைக் காட்டுவதற்கு "தொழார்" என்னும் பன்மையில்கூறினரென்றும், இறைவன் எண்குணங்களிலொன்றாகிய தூயவுடம்பினனாதல் எனபதைக்காட்ட "வாலறிவன்" என்றுகூறியிருக்கிறாரென்றும் இக்குறளியற்றிய புலவர்பெருமையும் இயற்ற இடங்கொடுத்த இனபத்தமிழினது பெருமையும் கிடக்கிறவெனக்கூறி முடித்தனர்.

திருவாளர் கோ. சுப்பையா அவர்களும், சி. முருகேசு அவர்களும், அவைத்தலைவரும் குறிப்புரை கூறிச் சொற்பொழிவாளருக்கு வந்தனம் கூறினர்.

ஞாயிறுவாரந்தோறும் காலை எட்டரை மணி தொடக்கம் 10 மணிவரைக்கும் சித்தாந்த நூற்பயிற்சிக் கழகமும், புதவாரந்தோறும் மாலை 7 மணிதொடக்கம் 8 மணிவரைக்கும் திருக்குறட்பயிற்சிக் கழகமும் இச்சபையின் ஆதரவின்கீழ் தமிழ்மண்டபத்தில் நடாத்தப்பட்டுவருகின்றனவென்பது சபையாருக்குத் தெரிவிக்கப்பட்டது.

சபைத்தலைவருக்குத் நன்றிகூறப்பெற்று தேவாரபாராயணத்துடன் கூட்டம் எட்டரை மணியளவில் முடிவெய்தியது.

குரோதனஆண்டு புரட்டாதி மாதம் 29-ந்திகதி (14-10-25) புதன்கிழமை மாலை 7 மணியளவில் தமிழ்மண்டபத்தில்மத்தியமாகாணச்சைவமகாசபையாரால் சந்தானகுரவர்களுளொருவராகும் அருணந்தி சிவாசாரியரினது குருபூசைத்தினங்கொண்டாடப்பட்டது.

தேவாரபாராயணத்துடன் கூட்டம் ஆரம்பிக்கப்பெற்று இச்சபைச்செயலாளர்களுளொருவராகும் திருவாளர் சி. முருகேசு அவர்களால் குருபூசையின மகத்துவமும், அது நடாத்தப்படும் முறையும், திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் முதலிய அறுபத்து மூன்று நாயன்மாராலும், மாணிக்கவாசகர், பட்டினத்தடிகள், சேக்கிழார் நாயனார், தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார், இவர்களாலும், மெய்கண்டதேவர்முதலியசந்தானகுரவர்களாலுமே, சைவசமயம் தழைத்தோங்கியதால், இவர்கள் சைவர்களாகிய எங்களால் என்றும் போற்றற்பாலரென்றும், அப்பெரியார் முத்தியடைந்த திருநட்சத்திரங்களில் அவர்களுக்குச் சிறந்தமுறையோடு குருபூசைநடாத்தப்படல் வேண்டுமெனவும் அவர்களுள்ளும் சமயகுரவர் சந்தானகுரவர் முதலியோரது குருபூசைத்தினங்கள் விசேஷமாய்க் கொண்டாடப்படல் வேண்டுமெனவும் சிறிது விளக்கப்பட்டு, அருணந்தி சிவாசாரியரது சரிதமும், அவரால் அருளிச் செய்யப்பட்ட சிவஞான சித்தியார் இருபாவிருபது என்னும் நூல்களின் சிறப்பும் சித்தாந்த சாஸ்திரங்கள் பதினான்கின் மேன்மையும் எடுத்தோதப்பட்டது. தேவாரம் முதலிய அருட்பாக்கள் பாராயணஞ் செய்யப்பெற்று, முன்னமே நிவேதிக்கப்பெற்ற அவல் பழம் முதலியனயாவருக்கும் அருந்தக்கொண்டாட்டம் 8½ மணியளவில் முடிவெய்தியது.

சடிக.

உண்மை உணர்தல்.

(முற்றொடர்)

9. பெரிய தொழில்களை நடத்துவோரிடம் சிலர் சென்று, "உங்களிடமிருக்கும் வேலைக்காரர்கள் சாமர்த்தியமுடையவர்களல்லர்; நாம் எத்தொழிலையும் மிகச் சாமர்த்தியமாகச் செய்வோம்; அவர்களைத் தள்ளிவிட்டு எம்மை வேலைக்கு வைத்து எமக்குத் தகுதியான சம்பளங் கொடுத்துப் பாருங்கள்" என்று அவர்களிடம் கெட்டிக்காரர்களாக அனுபோகமாய் வேலை பார்த்து வருவோரை அவ்விடத்தைவிட்டுக் கிளப்பிவிட முயற்சி செய்வார்கள். இவர்களுள் உண்மையாகவே, வேலைத் திறமையுடையவர்களுமுண்டு; ஒருவேலையும் தெரியாமல், வாய்ப்பட்டால் முன்னிருந்த சாமர்த்தியசாலிகளான உத்தியோகஸ்தரைத் துரத்திவிட்டு எஜமானனை ஏய்த்துப் பணம்சம்பாதிப்பாருமுண்டு. இவர்களுள் மெய்யான சாமர்த்தியமுடையவர்களைத் தெரிந்து அவர்கள் சொல்லையே நம்பவேண்டும். அப்படி நம்பினாலும் அவர்களுக்கு வேறு வேலை கொடுக்கவேண்டுமே தவிர முந்தின அனுபோகசாலிகளான வேலைக்காரரை நீக்கிவிடலாகாது.

10. பெரும்பான்மையோர் ஆதனமாக நல்லவிதத்தில் எழுதப்பட்ட சில புத்தகங்களை வியாபாரிகளிடம் அச்சிடக்கொடுத்து அவற்றிற்காக அதிக பணம் கேட்பார்கள். இத்தகைய நூலாசிரியர்களில் மெய்யாகவே தங்கள் கல்விச் சாமர்த்தியத்தைக்கொண்டு பிரயாசைப்பட்டுப் புத்தகம் எழுதுவோரு முண்டு. பிறருக்குக் கூலி கொடுத்து அவர்களிடம் விலைக்கோ இலவசமாகவோ எதையாவது எழுதி வாங்கிக்கொண்டுவந்து தந்திரமாகப் பணத்தைக் கவர நினைப்பவர்களுமுண்டு. இத்தகைய நூலாசிரியர்களில் உண்மையான ஆசிரியர்கள் எவரென்றுணர்ந்து அவர்கள் கொண்டுவரும் நூலுக்கே பணம் கொடுக்கவேண்டும்.

11. வியாபாரிகளிடம் மனிதர் பணம் கொடுத்து எதையாவது வாங்கும்போது, விலை அதிகமென்று ஏதாவது வார்த்தைபேசத் தொடங்கினால், அவ்வியாபாரிகள், "ஐயா! உங்களிடம் நான் பொய் கூறுவேனோ? உங்களிடந்தானா அதிக விலை வாங்குவேன்; சும்மா என் சொல்லை நம்பி இதை வாங்கிச் செல்லுங்கள்; வித்தியாசமொன்றுமிராது" என்று கூறித் தாங்கள் கொடுக்கும் சரக்கை வாங்கிக் கொண்டு போகும்படி செய்வார்கள். இத்தகைய வியாபாரிகளில் உண்மை கூறுவோருமுண்டு. ஒன்றுக்குப் பத்து விலையேற்றிப் பசப்புவார்த்தைபேசிப் பிறரை வஞ்சித்து அவரிடம் பொருள் கவருவாருமுண்டு. ஆதலின், இவர்களில் உண்மையான வியாபாரிகளைத் தெளிந்து அவர்களுடைய சொல்லில் மாத்திரமே நம்பிக்கை வைக்கவேண்டும்.

12. சிலர், "எமக்குப் பத்து ரூபா அனுப்புகிறவர்களுக்குப் பிழைக்கும் வழி காட்டுகிறோம்" என்று பத்திரிகையில் விளம்பரம் செய்வார்கள். இவர்களுள் உண்மையாகவே ரூபாவைப் பெற்றுக்கொண்டு ஏதேனும் நன்மார்க்கம் காட்டுகிறவர்களுமுண்டு; பணத்தைப் பலரிடம் ஏமாற்றிக் கைப்பற்றிக்கொண்டு பணங்கொடுத்தோர் மனம் புண்ணாகும்படி ஏதேனும் உபயோகமற்ற விஷயத்தை அவர்களுக்கு உரைத்து மோசஞ் செய்வாருமுண்டு: இத்தகைய காரியங்களில் உண்மையான விளம்பரம் செய்வோரைக் கண்டுபிடித்து அவர்களுக்கே பணம் கொடுக்கவேண்டும்.

13. சிலர்வந்து, "நான் வைத்தியத்தில் மகா நிபுணன்; எனக்கு நூறு ரூபா கொடுத்தால் உங்களுக்கு வியாதியே வராமல் செய்துவிடுகிறேன்" என்று கூறுவார்கள். இவர்களுள் மெய்யாகவே அவ்வாறு செய்யக்கூடியவர்களுமுண்டு; எதையாவது செய்து கொடுத்துவிட்டுப் பணத்தைப் பாக்கெட்டில் போட்டுக்கொண்டு கம்பி நீட்டுவாருமுண்டு. இவர்களில் உண்மையான பண்டிதர்களைக் கண்டு அவர்களிடமே பணம் கொடுக்கவேண்டும்.

14. இன்னும் பலர்வந்து, "சோதிடசாஸ்திரத்தில் நாம் மிகத் தேர்ச்சியடைந்திருக்கிறோம்; பல மடாதிபதிகளிடத்தும், ஜமீன்தார்களிடத்தும், பிரபுக்களிடத்தும் மெடல் தோடா பரிசு பெற்றிருக்கின்றோம்; சில மடங்களிலிருந்து நமக்கு அபிமானச் சம்பளம் வருகின்றது; எமக்கு ஐம்பது ரூபா கொடுத்தால் உங்களுடைய ஜாதகத்தை நன்றாகக் கணித்துப் பலாபலன்களைத் தெளிவாக ஆராய்ந்து சொல்வோம்" என்று கூறுவார்கள். இவர்களுள் உண்மையாகவே சோதிடத்தில் உழைத்து நிபுணத்துவம் பெற்றவர்களுமுண்டு; ஒரு விஷயமும் தெரியாமல் இடம்பமாகப் பேசி ஏமாற்றிப் பணத்தைக் கைப்பற்றிக்கொண்டு எதையாவது எழுதிக்கொடுத்து விட்டு ஓட்டம்பிடிப்பாருமுண்டு. இவர்களுள் உண்மையான சோதிடர்களைக் கண்டு அவர்களுக்கே பணம் கொடுக்கவேண்டும்.

15. சிலர், கௌரவமான உடையணிந்து, மதிப்பான வார்த்தைகளைப்பேசி, "எங்களிடம் உங்கள் பணங்களைக் கொடுத்துவையுங்கள்; நாங்கள் காப்பாற்றி வைத்திருந்து உங்களுக்கு வேண்டியபோது தருவோம்" என்று கூறுவார்கள். இவர்களுள் உண்மையாகவே நாணயமிக்க பெரியமனிதர்களுமுண்டு; பெரிய மனிதர்களைப்போல வேடமிட்டு ஏழைகள் பணத்தை ஏமாற்றிக் கவர்ந்து வயிற்றில் போட்டுக்கொள்ளும் மாயாவிகளுமுண்டு. இப்படிச் சொல்பவர்களில் சத்தியவர்த்தர்களாகிய பெரிய மனிதர்களைத் தெரிந்து அவர்களிடமே பொருளைக் கொடுத்து வைக்கவேண்டும்.

16. சிலர், "எங்களோடு புறநாடுகளுக்கு வந்தால் அங்கே உங்களுக்கு அநேகம் சௌகரியங்களைச் செய்துவைப்போம்" என்று ஜனங்களை அழைப்பார்கள். இவர்களில் மெய்யாகவே பொதுநன்மைக்குப் பாடுபடுகிறவர்களுமுண்டு; ஜனங்களுக்கு ஆசைவார்த்தை சொல்லி அவர்களைக் கப்பலேற்றி அன்னிய தேசங்களுக்குக் கொண்டுபோய்த் தங்கள்

பணம் சம்பாதிக்கும் பொருட்டுப் பலசங்கடங்களில் மாட்டிவைத்து விடுவோருமுண்டு. இத்தகையவர்களில் உண்மையான பொது ஜனோபகாரிகளையே நம்பவேண்டும்.

இங்குக் காட்டியவாறு உலகத்தில் பற்பல வகைகளிலும் எண்ணத்தொலையாத விஷயங்களிருக்கின்றன; அவற்றிலெல்லாம் நல்லாரோடு பொல்லாரும் கலந்தேயிருக்கின்றார்கள். அத்தனை வகுப்பாரையும் இங்கெடுத்தெழுதுவது சாத்தியப்படாது. மனிதர் அநுபவத்தில் அன்னோரை எந்நாளிலும் கண்டுகொள்ளலாம். இவர்களுள் பொல்லாரை நீக்கி நல்லார்களுக்கு நலம் புரிவதே தகுதியாயிருந்தும், சாஸ்திரங்களும் அவ்வாறே கூறியும், பெரும்பான்மையோர் பகுத்தறிவுத் தன்மை யின்மையாலும், வேறு சில அபிப்பிராய பேதங்களாலும் எல்லாவிடங்களிலும் பொருளீதல், கௌரவம்கொடுத்தல் முதலிய காரியங்களைச் செய்து வருகின்றார்கள். சிலர், "தெய்வ சின்னங்களைத் தாங்கியவர்கள் எவ்வளவு துர்க்குணமுடையவர்களாயிருந்தாலும் அவர்களை உயர்ந்தவராகவே நினைக்கவேண்டுமென்று பெரியோர்கள் கூறியிருக்கின்றார்கள்; யாராயிருந்தாலும் இல்லையென்றிரப்பார்க்கில்லையென்னாமல் ஈவதே தருமம் என்று சான்றோர் சாற்றுகிறார்கள்; ஆதலின், எல்லோருக்குமே அவரவர்களுடைய விருப்பத்திலும் உதவிகளைச் செய்தலே சிறந்ததாகும்" என்று ஒரு குருட்டு நம்பிக்கை வைத்துப் பாகுபாடின்றி எல்லாவிடங்களிலும் பொருட்செலவு செய்கின்றார்கள். எல்லாவற்றையும் துறந்து தெய்வ சிந்தனையை மட்டும் குறித்த ஞானிகள், பார்க்குமிடங்களிலெல்லாம் தெய்வபாவனையே செய்வார்கள். அத்தகையவர்கள், தெய்வ சின்னங்களையுடையவர்கள் எத்தகையராயிருந்தாலும், 'அவரே யாம் வணங்குங் கடவுளாவார்' என்று தங்கள் நிலைக்குத் தக்கவாறு உரைத்தார்கள். அதனால், உலகத்தை ஏமாற்றும் நடிப்புககாரர்களையெல்லாம் லௌகிகத்திலுள்ளவர்கள் கௌரவிக்க வேண்டுமென்பது கருத்தன்று. இல்லையென்றிரப்பார்க்கில்லை யென்று சொல்லக்கூடாதென்றது, உண்மையாகவே பொருளில்லாமல் யாசிப்பவர்களைக் குறித்துச் சொன்னதேயன்றி, உள்ள பொருளை மறைத்துவிட்டு மேலும் பொருள் சேகரிக்க யாசகர் வேடமிட்டுவரும் மோசக்காரரைக் குறித்தன்று. இந்த உண்மைகளை உணராமல் சிலர் தப்பபிப்பிராயங்கொண்டு செய்யத்தகாதன செய்கிறார்கள். இந்த குறைக்கு ஏதுவானது, தற்காலத்தில் நூதன ஞானங்கற்ற சிலர், "மனிதர் இழிவான காரியங்களைச் செய்தாலும் அவர்களை நிந்தித்துக் கண்டித்தல் கூடாது" என்று பத்திரிகைகளிலும், நூல்களிலும் எழுதிப் பிரசங்கங்களிலும் சொல்லுவது போன்றிருக்கின்றது.

இன்னனம் எம் நாட்டில் அன்னிய நாட்டு விபரீத ஞானம் பரவியதால் பெரும்பான்மையோர், நல்லவர் கெட்டவர் என்ற பாகுபாடின்றி எல்லாரிடத்திலும் தானதர்மம், கௌரவம் முதலியவற்றைச் செய்துவருவதால் நடிப்புக்காரர்கள் நலம்பெறுகின்றார்கள்; உண்மையாளர்கள் கௌரவமிழந்து துன்புறுகின்றார்கள்; தர்மங் குறைந்து அதர்மந்தலையெடுக்கின்றது. சற்காரியங்களைப் புரிவோர்க்கும் அதற்குரிய பயன் கிடைக்காமல் தீமைக்கிடமாகின்றது. ஆதலின், இம்மை மறுமைப் பயன்களையடைய விரும்புவோர், ஒவ்வொரு விஷயத்திலுமுள்ள நன்மை தீமைகளைப் பகுத்துணர்ந்து நன்மையையே செய்துவர விரும்புகிறோம். சிலர், அவ்வாறு செய்தற்கு மனிதரின் இயற்கைக் குணங்களை எவ்வாறு உணர்தல் முடியும் என்று சொல்லக்கூடும். அஃதவ்வளவு முடியாத காரியமன்று. ஒரு மனிதனுடைய தோற்றத்தாலும், வார்த்தையாலும், நடக்கையாலும் அவனுடைய உண்மைத் தன்மையை எளிதில் உணர்ந்துகொள்ளலாம். இவ்வாறு எல்லோரும் அறிந்து உண்மையாளர்க் குதவிபுரியுமாறு எல்லாம் வல்ல இறைவன் திருவருள்புரிவாராக.

"ஆனந்தபோதினி".

ஒற்றுமை

சித்திரப் படங்களுடனும் விநோதப் படங்களுடனும் தமிழ்மொழி வளர்ச்சி கருதி வரும் மாதப்பத்திரிகை 'ஒற்றுமை'க்கு 6-வது வருடம் நவம்பர்மாதம் பிறக்கப்போகிறது. மாதிரிப் பிரதி இனாம். வருடசந்தா உள்நாடு ரூபா 1. வெளிநாடு ரூபா 1¼. ஏஜண்டுகள் தேவை. நல்ல கமிஷன்.

'ஒற்றுமை' ஆபீஸ்,
(H. 43.) சைதாப்பேட்டை, மதராஸ்

விளம்பரம்.

கீழே குறிக்கப்பட்ட மரங்கள் பிரசித்த ஏலத்தில் யாழ்ப்பாணம் காட்டேசண்டுத்துரை அவர்களால் பின்னால் சொல்லப்படுமிடங்களில் விற்கப்படும்.

கிளிநொச்சி மரக்காலையில் இவ்வாண்டு கார்த்திகைமீ 10உ செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு விற்கப்படும் மரங்கள்.
75 பாலைமரங்கள்.

யாழ்ப்பாணம் விறகுகாலையில் இவ்வாண்டு கார்த்திகைமீ 11உ புதன்கிழமை காலை 9-30 மணிக்கு விற்கப்படும் மரங்கள்
86 பாலைமரங்கள்

காங்கேசன்துறை மரக்காலையில் இவ்வாண்டு கார்த்திகைமீ 12உ வியாழக்கிழமை காலை 9 மணிக்கு விற்கப்படும் மரங்கள்.
50 முதிரைமரங்கள்.

R. M. WHITE,
Acting Conservator of Forests.

கண்டி
காட்டேகந்தோர்.
20-10-25
(G. 566.)

அஷ்டபந்தனமருந்து.

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சுத்தமான சரக்குகளைக் கொண்டு செம்மையாகச் செய்யப்பட்ட (சுவாமிக்குச் சாத்தும்) அஷ்டபந்தனமருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கிறது.

ருத்தல் ஒன்றின் விலை ரூபா 5.

சு. வைத்தியநாதக்குருக்கள்,
சிவன்கோவில்,
(M. 37) வண்ணார்பண்ணை.

"சேலம் பனியன்கள்."

உறுதியானது விலைசரசம்.
நாட்பட உழைக்கக்கூடியது,
வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

தேவைக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

ரூயல் நிட்டிங் பேக்டரி,
செவ்வாய்பேட்டை, சேலம்.
(H 40) S. இந்தியா.

சேலம் ஜவுளிதினிசுகள்.

எங்களிடம் சொந்தத் தறிகளில் நெய்யப்பட்ட பட்டுத்தினிசுகளும், பட்டும் பருத்தியும் கலந்த தினிசுகளும், தாளம்பூக்கரைப் புடைவைகளும், வெள்ளை ஜவுளி தினிசுகள், குண்டஞ்சு, சன்னஞ்சு, பவுனபேட்டு, இன்னும் பல மாதிரிகள் இருக்கிறது. விலாசம்தெரிவித்தால் பிறைஸ் லீஸ்ட் இலவசமாய் அனுப்புகிறோம்.

விலாசம்:
கோ. ப. சீ. அ. வேணுகோபால்செட்டியார்
அன்ட் பிறதர்ஸ்,
ஜவுளி & கமிஷன் ஏஜண்டு,
குகை, சேலம். S. I.

தந்தி விலாசம்:
வேணுகோபால்,
சேலம்.
(H. 32.)

தேக்கமரம்.

புதிதாக வருவிக்கப்பெற்ற திறமான தேக்கமரங்கள், நீளம் 6 அடிதொடக்கம் 30 அடிவரையிலுள்ளன, கனம் 10 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம்வரையிலுள்ளன, நீண்ட மரங்கள் குறைவாயிருப்பதினால், எம்மிடம் வழக்கமாயெடுப்பவர்கள் தங்கள் ஆடர்களை ஏற்கனவே செய்துகொள்ளவேண்டியது.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானாறு,

தந்திவிலாசம்
நா பி. வல்லுவெட்டித்துறை.
(H. 37.)

புதிய தினுசுகள் சகாய விலைகள்

நூதனமான பட்டு ஜவுளிகள்.

எங்களிடம் தற்காலம் நாகரிகத்திற்கேற்ற பனாரிஸ், பெங்களூர், சேலம், கோயம்புத்தூர், கொர்னாடு, காஞ்சீபுரம், கும்பகோணம், தஞ்சாவூர், பாடிப்பேட்டை, பட்டணம், பாரிஸ் பட்டு முதலிய தினுசுகளில் சுத்தமானபட்டுச்சேலைகளும் ஜரிகைநூல் சேலைகளும், பட்டுச்சரிகைச் சால்வைகளும் தினுசுகளும் தயாராயிருக்கிறது.

ஒருதடவை வாங்கிப் பார்த்தால் அதின் நயம் தெரியும். வெளியூர் ஆடர்கள் வி. பி. மூலமாக அனுப்பப்படும்.

பி. ஆர். அனந்தநாராயணய்யர்,
ஜவுளி வியாபாரம்,
205, செட்டித்தெரு,
கொழும்பு.

P. R. Ananthanarayana Iyer,
Silk & Cloth Merchant,
205, Sea Street,
COLOMBO.
Y. 39)

அடைவுநகைவிற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக்கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்-மேற்கு கா. சி. ச. மும. முத்துக்கிருஷ்ணநாயுடுவிடம்அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி டிை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1924ஆ ஆகஸ்ட்மீ

நம்.	திக.	ரூ.	பெயர் ஊர்	நகைகளின் விபரம்
1137	7	45	கோப்பாய் ச. ஞானம்	பொன் சாதாக்கம்பிப்பூரானட்டியல் 1
1138	7	32	வேலணை ஆ. நாகலிங்கம்	பொன் காதுமணிசோடி 1
1142	7	240	தலையாளி ச. நடராசய்யர்	பொன் வைடமண்காப்பு சோடி 1, வைடமன் வளையல்க்காப்பு சோடி 1, பூக்காப்புசோடி 1, நீக்கல் மோதிரம் 1, ஆண்டுவைத்தபிரான்சுக்காசு 1, அவல் மாலை 1, இரண்டுபட்டுகைக்கெடிகாரச்சங்கிலி 1, சங்கிலி 1
1145	7	35	பறங்கித்தெரு ஞா. ஆக்னேசு	பொன் திருகுசுரையில்லாத சம்பிப்பூரான.1
1151	9	60	சுதுமலை சி. காசிப்பிள்ளை	பொன் பட்டணக்காப்புசோடி 1
1160	10	12	நல்லூர் வி. ஞானப்பிரகாசம்	பொன் சாதா தோடுசோடி 1, சிறுகைத்தடை 1, வெள்ளி அரைஞாண் 1
அக்டோபர்மீ				
1207	1	60	சுண்டிக்குளி ச. யோசேப்பு	பொன் பழையபட்டணக்காப்புசோடி 1
1213	2	45	வேலணை க. காசிப்பிள்ளை	பொன்கம்பிப்பூரானட்டியல் 1
1214	2	50	வேலணை க காசிப்பிள்ளை	பொன் பட்டணக்காப்பு சோடி 1
1216	3	70	நச்சமட்டை க. பொன்னையா	பிசகோர்க்கியில் இரண்டுபக்கமும் செம்புச் சட்டைகம்பிவைத்த பொன் சங்கிலிக்கொடி 1
1219	4	70	கரையூர் டே. சந்தியாகுப்பிள்ளை	பொன் பழையபட்டணக்காப்பு சோடி 1
1242	10	50	சுண்டிக்குளி கா. வயிரமுத்து	பொன் பட்டணக்காப்பு சோடி 1
1254	14	40	சுண்டிக்குளி செ. ரெத்தினம்	இமிட்டேஷன் சிகப்புக்கல்வைத்த டிம்மியுடன் திருகில்லாத பழைய பொன் கம்பிப்பூரானட்டியல் 1

விற்பனவு:—குரோதனஞு ஐப்பசிமீ 15உ (31-10-25) சனிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்டநகை பிறகிங்கலாக மிகுதி வண்.மேற்கு டிை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி ஐயம்பிள்ளை உடையார்,
வெந்திஸ்மேஸ்தர்
(Mis. 738.)

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக்கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்கிழக்கு மு. மு ம. மு. சேவுகஞ்செட்டியாரிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போதுதவணைதப்பி டிை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1924ஆ செப்டெம்பர்மீ.

நம்.	டெ.	ரூபா.	ஊர் பெயர்	நகைகளின் விபரம்.
27	13	80	வண்கிழக்கு கந்தர் ஆறுமுகம்	பொன் பட்டணக்காப்புச் சோடி 1
38	16	30	சுன்னாகம் முத்துக்குமாரு சின்னத்துரை	பொன் திருகில்லாத தாலிக்கொடி 1
39	16	55	கோப்பாய் பண்டாரி பொன்னு	பொன் பட்டணக்காப்புச் சோடி 1
49	17	27	கரையூர் அந்தோனி யோசேப்பு	பொன் இமிட்சிகப்புக்கல்வைத்த கவுத்தோர் 1
54	17	55	வண்கிழக்கு சின்னத்தம்பி கந்தையா	பொன் பட்டணக்காப்புச் சோடி 1
55	17	7	கரையூர் வயிரமுத்து அந்தோனிப்பிள்ளை	பொன் கவுத்தோர் 1
56	18	130	கொக்குவில்கிழக்கு சின்னத்தம்பி பூபாலரத்தினம்	பொன்சங்கிலிக்கொடி 1
69	18	35	சோனகதெரு முகமது காதுமுத்து	பொன் பழுது சவடிக்கொடி 1
94	22	60	நாவற்குளி ஆறுமுகம் கந்தையா	பொன் பீலிக்காப்புச் சோடி 1
101	23	60	சுண்டிக்குளி ந. ஆறுமுகம் சிவக்கொழுந்து	பொன் தாலித்துக்கோர்த்த குண்டுச் சங்கிலி 1
108	24	125	சுண்டிக்குளி ஆறுமுகம் சிவக்கொழுந்து	பொன் சங்கிலிக்கொடி 1
113	24	61	பறங்கித்தெரு யாகசோபு ஞானமுத்து	பொன் திருகில்லாத சங்கிலிக்கொடி 1 இமிட் தோடு சோடி 1
119	25	50	வண்ணார்பண்ணை நாகமணி காமுத்து	பொன் பீலிக்காப்புச் சோடி 1
136	28	55	கோப்பாய் நல்லதம்பி முத்து	பொன் பழுது பட்டணக்காப்புச்சோடி 1
அக்டோபர்மீ				
153	1	50	தாவடி செல்லையா சின்னையா	பொன் கம்பிப்பூரானட்டியல் 1
172	5	6	போலீஸ்லைன் கே. ஏ. வில்மட்	பொன் காசு 1
201	9	22	செட்டித்தெரு முதலித்தம்பி கணபதிப்பிள்ளை	பொன் குண்டுச்சங்கிலி 1
211	11	60	கொழும்புத்துறை நாகர் சாமிவேலு	பொன் முகப்பில்லாத தாலிக்கொடி 1
225	13	50	வண்கிழக்கு க. தம்பு கந்தையா	பொன் முகப்புடன் கொலுசுக்காப்புச் சோடி1
242	15	65	சுண்டிக்குளி கதிரேசு நாகலிங்கம்	பொன் பட்டணக் காப்புச்சோடி 1

விற்பனவு:—குரோதனஞு ஐப்பசிமீ 15உ (31-10-25) சனிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்டநகை புறகிங்கலாக மிகுதி டிை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

அரு. செல்லையா உடையார்,
வெந்திஸ்மேஸ்தர்.
(Mis 736)

சமையல் சௌக்கியம்.

இந்தியாவிலும் வெளிநாட்டிலும்
புகழ்பெற்று விளங்கும்.

ருக்குமணி குக்கர்.

சமையல் அடுக்கை உபயோகிப்பவர்களுக்கே உண்டு முதல் 8 பேர்களுக்கு ஒரு மணிநேரத்தில் சொற்ப செலவில், தொந்தரவேயில்லாமல் சாதம் 5 கறிவகைகள் சமைக்கும். தனித்தவர்களுக்கும் குடும்பிகளுக்கும் வீட்டிலும் பிரயாணத்திலும் உபயோகம்.

1, 2, 4, 6, 8, பேருக்குரியது ரூபா 13, 18, 22, 27, 33-க்கு கிடைக்கும். தபாற்கூலி வேறு. விபரப் புத்தகம் இனாம். ஏசண்டுகள் தேவை. உடனே எழுதுக.

ருக்குமணி குக்கர் கம்பெனி,
இராயப்புரம் (2) சென்னபட்டினம்.
(Y. 45)

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவு பிடிக்கும் திருகோணமலை காசுக்கடைவீதி க. தம்பிப்பிள்ளை, வைத்திலிங்கம் என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி டிை சட்டத்தின் 12-ம்பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்பட வேண்டிய நகைகளின் விபரம்

1923-ம்ஆ 11மீ

நம்.	டெ.	ரூபா சத.	நகைகளின் விபரம்.
₺386	5	19	வெ. பழைய பாதசரம்சோ 1 ச. வி. பழு.
387	6	12	தோடு சோடி 1 நசி.
453	16	9	மணிக்கோர்வை 1-ல் மணி39 பி. இ. உடை.
463	18	6 50	பொன் தோடுசோடி 1 பழு.
466	18	16	வெ. கொலுசு சோடி 1
	12-ம் மீ		
562	5	35	பொன் தாலிக்கொடி 1 பழுது சு 1 இ.
606	15	18	பொற்பத சவுக்கமணிக்கோ. 1-ல் மணி 30 பழுது
638	21	30	கொப்புச்சிமிக்கி சோ.13நூல் மணியட்டியல் 1 பழு சிறு மணிக்கோர்வை 1 ல் மணி 21,பி.இ.பழு வெ. தண்டை சோடி 1 சு 1இ பழு
641	22	6	சிறு செருகுதோடு சோ.1பழு
656	25	6	வெ. அரைஞாண் 1 பழு.
575	28	10	சவுக்கமணிக்கோ. 1-ல் மணி 25 பழு.
698	31	10 50	பொன் பெட்டிமோதிரம் 1 பழு சிறு அரசுாதப்பூ சோடி 1 பழுது
1924ஆ 1-ம்மீ			
790	19	12	வெ. பாதசரம் சோடி 1
801	21	13	தோடு சோடி 1 பழுத
	2-ம்மீ		
880	11	15	வெ.பழை.பாதசரம் சோடி 1 ச. வி பழு.
898	17	10	இமிற்கல்மோதிரம் 1
921	22	6	சிறுமணிக்கோர்வை 1ல் மணி 14 உடன் பாசிமணி பழு. சிறுபடச்கூர் 1 பழுது
	3-ம்மீ		
951	3	6	வெ. கறணைசோ. 1
	4-ம்மீ		
1061	12	10	பொன்காப்பு 1
1074	19	45	பதக்கம்பிப்பூரானட்டியல்1பத, பழுது
1076	19	6	சிறு கொப்புச்சிமிக்கிசோடி 1 மு. இ.
1094	23	7	வெ. அரைஞாண் 1 பழுது
1101	24	11	தங்கமோதிரம் 1
1109	27	6	மெழுகுருவை சோடி 1
1110	27	28	கைச்சங்கிலி 1
	5-ம் மீ		
1124	3	20	சப்புறுதவளையல் 1
1147	8	65	கொலுசுக்காப்புசோடி 1
1196	20	22	கைச்சங்கிலி 1
1222	24	6	தோடு சோடி 1 பழுது
	6-ம்மீ		
1269	6	7	தோடுசோடி 1 பழுது
1337	20	12	பல்வித சவுக்கு மணிக்கோர்வை 1ல் மணி 34 பழுது
1382	27	6	இமிற் தோடு 1 ஊ. இ. பழுது
1388	28	65	4 பவுண்சங்கிலி 1 பவுண் 2
	7-ம்மீ		
1422	7	14	சவுக்கமணிக்கோர்வை 1 மணி 19 உடை
	8 ம்மீ		
i4	1	7	மணிக்கோர் 1 ல் மணி 34 பி. இ. நசி. கூர்வாளி சோ 1 பழுது
6	2	15	பொன்சங்கிலி 1 பி. இ பழுது
41	10	6	மணிக்கோ 1ல் மணி 27 பி.இ. உடை பழுது
66	17	55	தாலிக்கொடி 1 பழுது

விற்பனவு:—குரோதனஞு ஐப்பசிமீ 26உ (11-11-25) புதன்கிழமை காலை 9மணிதொடக்கம் எடுபட்டநகைபிற கிங்கலாக மிகுதி டிை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ச. கதிர்காமத்தம்பி,
வெந்திஸ்மேஸ்தர்.
(Mis. 737.) 21—10—25.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க
மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா
துயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவ
நீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by Pandit V. T.Sambandhan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna,